தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 12.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஜூன் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை

மூன்றாவது ஆண்டு நிறைவை கொண்டாடுகிறது
Celebrating third year of bringing you the news
தமிழன்
THAMILAN
Follow us:
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ்: 02 சோபகிருது வருடம், ஆனி மாதம் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(23.06.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 04, 0115 886187 - பக்கங்கள் 12
விலை ரூ.50

# அனைவரும் வருக! ஆதரவு தருக

'தமிழன்' பத்திரிகையின் 03ஆவது அகவை நிறைவு விழாவுக்கு வாசகர்கள், விளம்பரதாரர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

**இடம்: பம்பலப்பிட்டி, சரஸ்வதி மண்டபம்**
**காலம்: 23.06.2023 – மாலை 5 மணி**

# தமிழனின் தாரகமந்திரம்

காலச்சக்கரம் விரைந்து சுழல்கிறது. தமிழ்பேசும் மக்கள் மத்தியில் 'தமிழன்' தனக்கென்று களமொன்றை வசமாக்கிக்கொள்ளும் பயணத்தை தொடங்கி நேற்றுடன் மூன்று வருடங்கள் நிறைவடைந்து இன்று நான்காவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கின்றது. நாம் கடந்து வந்திருப்பது குறுகிய ஒரு காலப்பகுதியாக இருந்தாலும் அதை திரும்பிப்பார்க்கும்போது ஒரு புறத்தில் எமது உழைப்பின் விளை பயன் குறித்து திருப்தியடையக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை, மறுபுறத்தில் வருங்காலத்தில் நாம் முன்னெடுக்கவேண்டிய பணிகளின் கனதி எம்மிடம் இருக்கவேண்டிய பொறுப்புணர்வை உணர்த்தி நிற்கிறது.

முதலில் இணையவெளியில் வலம் வந்த தமிழன் பொதுவெளியில் வரத்தொடங்கிய காலப்பகுதி இலங்கையின் வரலாறு காணாத நெருக்கடிகள் நிறைந்ததாக இருந்தது. உலகை உலுக்கிய கொவிட் பெருந்தொற்று, அடுத்து வந்த படுமோசமான பொருளாதார நெருக்கடி, அதன் விளைவாக தோன்றிய அரசியல், சமூக கொந்தளிப்பு ஆகியவற்றின் சவால்கள் எல்லாவற்றையும் துணிச்சலுடன் கடந்து அர்ப்பணிப்புச் சிந்தையுடனான உழைப்பின் மூலமாக தமிழனை தலைநிமிர வைத்த இளம் பத்திரிகையாளர்கள் குழுவினரும் ஏனைய ஊடகப் பணியாளர்களும் பெரும் பாராட்டுக்குரியவர்கள்.

கொரோனா வைரஸ் உலகெங்கும் பரவத்தொடங்கிய நாள் முதல் உலகில் பத்திரிகைகள் பெரும்பாலும் இலத்திரனியல் வடிவத்தை வெளியிட்டு இணைய வெளியில் வாசகர் சனத்தொகையை பெருக்குவதில் தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருந்தவேளையில், அச்சு இயந்திர ஊடகங்களின் எதிர்காலம் குறித்து பரவலாக சந்தேகங்கள் கிளப்பப்பட்டுக்கொண்டிருந்த வேளையில், தமிழன் பத்திரிகையின் ஒப்பேறும் தகுதி மற்றும் ஆற்றல் குறித்து பல்வேறு தரப்புகளிடமிருந்து வந்த எள்ளல்தனமான எச்சரிக்கைகளை நாம் ஒரு சவாலாகவே எடுத்து துணிவாற்றலுடன் செயற்படத் தொடங்கினோம்.

தமிழ்பேசும் சமூகங்களின் முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்ற முழுமையான நம்பிக்கையில் நாம் எந்தவொரு கட்டத்திலும் தளர்ந்துபோகவில்லை. அவர்கள் தமிழனை தேசிய தமிழ்ப் பத்திரிகைகளின் வரிசையில் ஒன்றாக வரவேற்று எம்மை அரவணைத்தமைக்காக முக்கியத்துவம் வாய்ந்த இன்றைய சந்தர்ப்பத்தில் நாம் எமது மனம் நிறைந்த நன்றியறிதல்களை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதழியல் பெறுமானங்களை பாதுகாத்துக்கொண்டு வர்த்தக நலன்களுக்கும் சந்தையின் தேவைகளுக்கும் ஏற்புடைய முறையில் இசைவாக்கம் பெறுவது என்பது பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரை ஒரு அமிலப்பரீட்சையாகவே இருந்துவந்திருக்கிறது என்று தமிழன் முதல் இதழிலேயே நாம் குறிப்பிட்டிருந்தோம். அதனை மனத்தைரியத்துடனும் அயரா உழைப்புடனும் எதிர்கொண்டு சமூக அக்கறையுடனும் நெறிமுறையுடனும் கூடிய இதழியல் பயணத்தை முன்னெடுத்தோம்.

இலங்கையின் சகல சமூகங்களையும் பல தசாப்தங்களாக பெரும் அவலத்தில் ஆழ்த்திய ஆரோக்கியமற்ற அரசியல் போக்குகளை நிராகரித்து... 02 பக்கம்

# ரணில் ஹிட்லர்!



## ● புலி உறுப்பினருக்கு ரெலிகொம் விற்பனை
## ● சபையில் கடுமையாகச் சாடிய பொன்சேகா

த.யுவராஜ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஹிட்லராக மாறிவருகிறார். பல சட்டங்களைக் கொண்டுவந்து அடக்குமுறையில் ஈடுபட முயல்கிறார். ரெலிகொம் நிறுவனத்தை... 02 பக்கம்

# குற்றங்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

கே. சுபானி

மேல் மற்றும் தென் மாகாணங்களில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் உள்ளிட்ட குற்றங்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. பொலிஸ் உயரதிகாரிகளுடன் அமைச்சில் நேற்றுமுன்தினம் (21) இடம்பெற்ற கூட்டத்தின்போது அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். 02 பக்கம்



# சுகாதாரத்துறையில் பாரிய குறைபாடுகள்

## தீர்க்க முடியாவிட்டால் பதவி விலகுவாராம் கெஹேலிய

நா. தினுஷா

"நிதிப் பற்றாக்குறையின் காரணமாக சுகாதாரத்துறையின் செயற்பாடுகள் பாரதூரமாக பாதிப்படைந்துள்ளன. எந்த காரணமாக இருந்தாலும் அந்த குறைபாடுகளின் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



நடுநிலைமை ஊடகமெண்டு எதிர்க்கட்சித் தலைவரே சொல்லுறார் எண்டால் அதுதானே மக்களின் கருத்தாகவும் இருக்கும்.. என்னங்கோ நான் சொல்லுறது?

# நடுநிலை பத்திரிகை தமிழன்

## நேரில் வந்து வாழ்த்தினார் எதிர்க்கட்சித்தலைவர் சஜித்



படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன

02பக்கம்




# நீலிக்கண்ணீர் வடிக்கும் ஜனாதிபதி ரணில்

## யாழ். நூலகம் எரிக்கப்பட்டபோது என்ன செய்தாரென இராதா எம்.பி. கேள்வி

கே. சுபானி

தமது வீடு எரிக்கப்பட்டமை குறித்தும் அதிலிருந்த மூவாயிரம் புத்தகங்கள் எரியூட்டப்பட்டமை குறித்தும் இன்று நீலிக்கண்ணீர் வடிக்கும் ஜனாதிபதி... 02 பக்கம்

# மேலதிக விசா காலம்: தண்டப் பணத்தை அதிகரித்தது அரசு

நா. தினுஷா

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு பயணிகள் விசாவின் செல்லுபடி காலத்துக்கு மேலதிகமாக ஏழு நாட்கள் தங்கியிருந்தால் தண்டப்பணம் செலுத்தவேண்டியது... 02 பக்கம்

### உஷ்



சுகாதாரத்துறை அமைச்சுப்பொறுப்பை ராஜித்தவுக்கு வழங்கி அவரை ஆளுங்கட்சிக்குள் உள்வாங்க ரணில் தீர்மானித்துள்ளதால் அமைச்சரவையில் மாற்றங்களை செய்யமுன்னரே பதவி விலக தீர்மானித்திருக்கிறாராம் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல.

எப்படியோ ராஜிதவுக்கு சுகாதார அமைச்சை கொடுக்காமல் பவித்ரா வன்னியாராச்சிக்கு வழங்குமாறு பொதுஜன பெரமுன ரணிலிடம் கோரிக்கை விடுத்து வருகிறதாம்.






# முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 26 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் போரத்தின் தலைவி புர்கான் பீ. இப்திகார் தலைமையில் நாளை மறுதினம் (25) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் கொழும்பு தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக போரத்தின் செயலாளர் ஷிஹார் அனீஸ் தெரிவித்தார்.

இலங்கைக்கான மலேஷியத் தூதுவர் பதி ஹிஷாம் ஆதம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ள இக்கூட்டத்தில், களனிப் பல்கலைக்கழக பேராசிரியர் தெல்கஹவத்தகே ராஜ்குமார் சோமதேவ சிறப்பதிதியாகக் கலந்து கொண்டு "இலங்கையில் முஸ்லிம்கள் மீள் நோக்கிப் பார்த்தல்" எனும் தலைப்பில் விசேட உரையாற்றவுள்ளார்.

இரு அமர்வுகளாக நடைபெறவுள்ள இக்கூட்டத்தின் முதல் அமர்வில் ஊடகத்துறையில் பல வருடங்களாக சேவையாற்றியுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் பலர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அண்மையில் மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் மூத்த எழுத்தாளர் கலைவாதி கலீல் மீதான இரங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இரண்டாவது அமர்வில், 2023/24 ஆம் ஆண்டுக்கான தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் உட்பட செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுகளும் இடம்பெறவுள்ளன.

அத்தோடு, உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் போரத்தின் யாப்பில் சில திருத்தங்களை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# மின்கட்டண அதிகரிப்பு

## தெரிவுக்குழுவை நியமிக்குமாறு ஐ.ம.ச. சபாநாயகரிடம் கோரிக்கை



நா. தினுஷா

சட்டவிரோதமான முறையிலும் மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதளவுக்கு மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு எதிராகவும் அதுதொடர்பில் தேடிப்பார்ப்பதற்காகவும் விசேட தெரிவுக் குழுவொன்றை நியமிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பி னர்கள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்த கோரிக்கை தொடர்பான கடிதமொன்று நேற்று (22) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு, கிழக்கில் காணிப்பிரச்சினைகளுக்கு தீர்வு

## கனேடிய முன்னாள் பிரதமரிடம் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு




பயங்கரவாதத்தை வரையறுப்பது தொடர்பில் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் நிலவி வந்த சர்ச்சை நீதிமன்ற தீர்ப்பின் மூலம் தீர்க்கப்பட்டுள்ளதாகவும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நிலவும் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹாபரிடம் லண்டனில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் 40 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு அங்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஸ்டீபன் ஹாபர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டமை, நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அமுல்படுத்தப்பட்ட கொள்கை வேலைத்திட்டம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் என்பன தொடர்பில் விரிவாகக் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கையின் நிதி வாய்ப்புகளை வலுப்படுத்தி நீண்டகாலத்துக்கு சாதகமான வர்த்தக சமநிலையை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாகவும் தாராளமய பொருளாதார நெகிழ்வுக் கொள்கையை துரிதப்படுத்தல் மற்றும் முதலீடுகளை கவர்வதை நோக்காகக் கொண்டு செயல்படுவதாகவும் தெரிவித்தார்.

தாம் பிரதமராக இருந்த காலத்தில் மேற்கொண்ட முயற்சிகளின் அடிப்படையில் தமிழ் பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அவர்களின் முன்னேற்றத்துக்காக தொடர்ந்து உழைக்க விரும்புவதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டமை ,புதிய பயங்கரவாத தடைச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுதல் உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் தொடர்பில் உடன்பாடு எட்டப்பட்டிருப்பது குறித்தும் ஜனாதிபதி இங்கு கருத்துத் தெரிவித்தார்.

காணாமல்போனோர் அலுவலக நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## நடுநிலை பத்திரிகை...

'தமிழன்' பத்திரிகை நடுநிலையான ஊடகமாக செயற்படுகிறது. அதனை கருத்திற்கொண்டே வாழ்த்துத் தெரிவிக்க நேரில் வந்தேன். உங்களின் அந்த சேவை தொடரட்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்று தமிழன்பத்திரிகையின் தலைமை அலுவலகத்துக்கு விஜயமொன்றை எதிர்க்கட்சித் தலைவர் மேற்கொண்டார். அவருடன் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளரும் வடக்கு மாகாண இணைப்பாளருமான திருமதி உமா சந்திரபிரகாஷும் வருகை தந்தார்.

பத்திரிகை அலுவலகத்தின் பணிகள் குறித்தும் இதர அன்றாட செயற்பாடுகள் குறித்தும் நீண்ட நேரம் கலந்துரையாடிய சஜித் பிரேமதாச, தமிழன் பத்திரிகை குறித்தும் சிலாகித்துப் பேசினார்.

தமிழன் பத்திரிகையின் செயற்பாடுகள்,அதன் செய்திகள் தொடர்பில் நன்குஅறிவேன். உங்களின் நடுநிலையான செயற்பாடுகள் தொடர்பில் எனது மகிழ்ச்சியை ,பாராட்டுகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.எதிர்க்கட்சி,ஆளுங்கட்சி என்று பாராமல் மக்களுக்கான செய்திகளை கொண்டுசேர்ப்பதில் நீங்கள் சிரத்தையுடன் செயற்படுகிறீர்கள்.உங்களின் நடுநிலை போக்கு காரணமாகவே நான் நேரடியாக இங்கு வந்து உங்களை வாழ்த்துவதற்கு எண்ணினேன்.இந்த போக்கை நீங்கள் தொடரவேண்டும் என்றும் குறிப்பிட்டார் .

அச்சு ஊடகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் குறித்தும் மக்களிடையே வாசிப்பு ஆர்வம் எப்படியிருக்கிறது என்றும் இந்த கலந்துரையாடலின்போது கருத்துக்களை கவனமாக கேட்டறிந்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

## ரணில் ஹிட்லர்!...

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவருக்கு விற்பனைசெய்ய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பதாக கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பாராளுமன்றத்தில் நேற்று (22) கடுமையாகச் சாடினார்.

ஜனாதிபதியின் உரை மீதான ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

ரெலிகொம் நிறுவனத்தை விற்பனை செய்வது தொடர்பில் பிரித்தானியாவில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய நபருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. இன்று சட்டத்தைப் பற்றி பேசிப்பயனில்லை. தங்கத்தைக் கொண்டுவந்த எம்.பியை எப்படிப் பாதுகாத்து இந்தச் சபைக்கு அழைத்து வந்தார்கள் என்பதைப் பார்த்தோம். இவற்றைச் செய்வதன் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. மக்கள் உணவு, பானங்கள் இன்றி தவித்து வருகின்றனர். இக்கட்டான சூழ்நிலையை மக்கள் புரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்த கடினமான பாதையை ஜனாதிபதி ரணில் புரிந்துகொண்டார். உள்ளூர் வளங்களை விற்பதை எதிர்க்க வேண்டாம் என்றும் கூறுகிறார்.

ரெலிகொம் நிறுவனத்தை விற்கும் நம்பிக்கையின் அடிப்படையில் பிரித்தானியாவில் குறித்த நபரை சந்தித்துள்ளார். இவர் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பணப்பரிமாற்றம் செய்தவர். இலங்கையில் அவருக்கு தொலைக்காட்சி ஒன்றும் உள்ளது.

2048 இல் இலங்கையில் மிக நீளமான கெரட்டை உற்பத்தி செய்யப்போவதாக ஜனாதிபதி கூறுகிறார். அது எந்த காலத்திலும் நடக்காது. மக்களுக்கு உணவளிக்கும் திட்டம் எதுவும் அவரிடம் இல்லை. திட்டமில்லாமல் நாடு இருட்டில் தத்தளிக்கிறது. பல்வேறு சட்டங்களை கொண்டு வந்து மக்களை ஒடுக்க முயற்சிப்பதோடு ஊடகங்களை பழிவாங்க முயற்சிக்கின்றார்.

இந்த நாட்டில் நீதித்துறை மிகவும் ஊழல் நிறைந்து காணப்படுகிறது. அவர் ஹிட்லரைப் போல வாழ முயற்சிக்கிறார் . பல்வேறு சட்டங்களை கொண்டு வந்து மக்களை அடக்க முயற்சிக்கின்றார். ஊடகங்களை பழிவாங்க முயற்சிக்கின்றார். இந்த நாட்டில் நீதித்துறை மிகவும் ஊழல் நிறைந்தது. அந்நிலையில் ஊழல் தடுப்பு மசோதா கொண்டு வர முயற்சிக்கப்படுகிறது என்றார் .

## குற்றங்களுக்கு எதிராக...

இதன்பிரகாரம், மேல் மற்றும் தென் மாகாணங்களில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களில் யாருக்கும் செல்வாக்கு செலுத்துவதற்கு இடமளிக்கக் கூடாது என இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் உரிமம் பெறப்படாத அனைத்து வகை துப்பாக்கிகளையும் ஒப்படைப்பதற்கு ஜூலை 31 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

## நீலிக்கண்ணீர் வடிக்கும்...

ரணில் விக்கிரமசிங்க அன்று இந்நாட்டின் பொக்கிஷமாக கருதப்படும் யாழ். நூலகம் எரிக்கப்பட்டபோது என்ன செய்துகொண்டிருந்தார்? அதற்கு அவர் இதுவரை செய்தது என்ன என்று பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் சபையில் நேற்று (22) கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதியின் உரைமீதான ஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார். இதுகுறித்து அவர் மேலும் தெவிக்கையில்,ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தனது வீட்டை எரித்துவிட்டார்கள். அதிலிருந்த மூவாயிரம் புத்தகங்கள் எரிந்துவிட்டன என்று முதலைக் கண்ணீர் வடிக்கிறார்.ஆனால், அவர் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் .80களில் இந்நாட்டின் பொக்கிஷமாகக் கருதப்படும் யாழ்ப்பாண நூலகம் அன்று இந்த கட்சியின் உறுப்பினர்களால் எரிக்கப்பட்டது.

அதற்கு என்ன விமோசனம்? அவர் மூவாயிரம் புத்தகங்களுக்கு நீலிக்கண்ணீர் வடிக்கின்ற இதேநேரத்தில் தெற்காசியாவில் பிரசித்திபெற்ற அந்த நூலகம் எரிக்கப்பட்டபோது அவர் என்ன செய்துகொண்டிருந்தார்? அதற்கு அவர் இதுவரை என்ன செய்திருக்கிறார் என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

இன்று பெருந்தோட்ட மக்கள் பொருளாதார நெருக்கடியால் மிகவும் மோசமான பாதிப்புகளை சந்தித்துள்ள நிலையில் அவர்களுக்கு விமோசனம் என்பது கிடையாது. 200 வருடகாலமாக இம் மக்கள் இந்த நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள், வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் மூன்றுவேளை உணவை இரண்டுவேளையாக்கப்பட்ட நிலையில் தற்போது இரண்டுவேளை உணவு ஒருவேளையாக குறைவதற்கு இன்றைய பொருளாதார வீழ்ச்சியே காரணமாக இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் இன்று பொருளாதார வளர்ச்சிக்கான பல திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார். இருப்பினும் நாட்டின் அபிவிருத்தி என்பது பொருளாதாரம் விஸ்தரிக்கப்பட்டு ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலமே மேற்கொள்ள முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நிலையில் அவர் இந்நாட்டின் பிரதமராக ஐந்துமுறை இருந்திருக்கிறார். இருப்பினும் 50 ரூபா கூட சம்பள உயர்வை ஈட்டிக்கொடுக்காத நவீன் திசாநாயக்க இன்று சப்ரகமுவ மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இது மிக மோசமான நிலையை உருவாக்கும்.பெருந்தோட்டப் பகுதியில், கல்வியியல் கல்லூரியில் பயின்று ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்கள், இன்று சின்னாபின்னமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவிலுள்ளவர்கள் ஹம்பாந்தோட்டைக்கும் யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் நுவரெலியாவுக்கும் என பல்வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்டு நிரந்தமாக, அதாவது இலகுவாக போய்வரக்கூடிய, தமது சம்பளத்திலே சீவிக்கக்கூடிய நிலையில் அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை.

இதனை முறையாக மேற்கொண்டிருந்தால் குறித்த ஆசிரியர்களுக்கும் நல்லதாக இருந்திருக்கும். அங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கும் சிறப்பாக இருந்திருக்கும்.மனநிலை சரியாக இருந்தால் தான் ஒரு ஆசிரியர் மாணவர்களுக்கு கற்பிக்க முடியும். இன்றைய நெருக்கடிக்கு மத்தியில் 40ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெறும் அந்த ஆசிரியர்களை அலைக்களிப்பது என்பது கல்வித்துறையில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். இந்நிலையில் அரசாங்கம் இதுகுறித்து சிந்தித்து செயலாற்றவேண்டும் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன் என்றார்.

## மேலதிக விசா காலம்:...

கட்டாயம் என அறிவித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதன் பிராகரம், மேலதிகமாக தங்கியிருந்த கால எல்லை, முதல் விசாவின் செல்லுபடியாகும் காலம் முடிவடையும் தினத்திலிருந்து கணக்கெடுக் கப்படும் ஏழு நாட்களுக்கு (07) அப்பால் அல்லது 14 நாட்கள் வரையில் இருந்தால் 25 அமெரிக்க டொலர்களும் 14 நாட்கள் கடந்திருக்குமாயின் 500 அமெரிக்க டொலரும் தண்டப்பணமாக செலுத்தப்பட வேண்டும் என்று அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1956, பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி 10,896ஆம் இலக்க அரச வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 1956 குடிவரவு குடியகல்வு விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று அதில் மேலும் புதிய மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன.

அதற்கமைய, மேலதிகமாக தங்கியிருந்த கால எல்லை, முதல் விசாவின் செல்லுபடியாகும் காலம் முடிவடையும் தினத்திலிருந்து கணக்கெடுக்கப்படும் ஏழு நாட்களுக்கு (07) அப்பால் இருக்கும் சந்தர்ப்பங்களில் அல்லது 14 நாட்களை கடந்திருக்கும் சந்தர்ப்பங்களில் குறித்த விசா கட்டணத்துக்கு மேலதிகமாக 250 அமெரிக்க டொலர்கள் தண்டப்பணமாக அறவிடப்படும்.

மேலும், மேலதிகமாக தங்கியிருந்த கால எல்லை முதல் விசா செல்லுபடியாகும் கால எல்லை நிறைவடைந்த தினத்திலிருந்து கணக்கெடுக்கப்படும் 14 நாட்களை கடக்கும் சந்தர்ப்பத்தில் விசா கட்டணத்துக்கு மேலதிகமாக 500 அமெரிக்க டொலர்கள் தண்டப் பணமாக அறிவிடப்படும். மேலதிகமாக நாட்டில் தங்கியிருக்கும் கால எல்லை முதல் விசா செல்லுபடி கால எல்லை நிறைவடையும் தினத்திலிருந்து ஏழு நாட்களுக் குள் இலங்கையிலிருந்து வெளியேறும் நபரொருவர் தண்டப்பணத்தை செலுத்தாமல் விமான நிலையத்தில் குறித்த விசாவுக்கான கட்டணத்தை செலுத்திவிட்டு நாட்டிலிருந்து வெளியேறமுடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுகாதாரத்துறையில்...

அமைச்சராக அவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியவில்லை என்றால், தொடர்ந்து சுகாதார அமைச்சுப் பதவியை வகிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளேன் என்று சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல நேற்று (22) சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மயக்க மருந்தினால் சிறுவர்கள் உயிரிழந்த சம்பவங்கள் மூன்றும் பேராதனை போதனா வைத்தியசாலை மற்றும் சிறுவர் வைத்தியசாலைகளிலேயே இடம்பெற்றுள்ளன. இதுதொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிறுவர் வைத்தியசாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பொதுவாக சிறுவர் வைத்தியசாலைகளுக்கு மயக்க மருந்துகள் பெற்றுக்கொடுக்கப்படுவதில்லை. சிறுவர்களுக்கு மயக்க மருந்து பயன்படுத்துவதும் இல்லை.

அதனால், சிறுவர்களுக்கு மயக்க மருந்து பயன்படுத்தப்படாது என்பதால் மயக்கமருந்தினாலேயே இந்த உயிரிழப்பு இடம்பெற்றது என்று கூற முடியாது. ஏனைய சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பேராதனை தவிர்ந்த வேறு எந்த பிரதேசங்களிலும் இதுபோன்ற சம்பவங்கள் பதிவாகவில்லை.

மருந்துத் தட்டுப்பாடு விடயத்தில், மருந்து இறக்குமதி செயற்பாடுகளின்போது 09 மாத கால கொள்முதல் செயன்முறையை மெற்கொள்ள வேண்டியுள்ளது.அந்த காலப்பகுதியை குறைப்பதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொண்டிருந்தாலும் ஒரு தரப்பினர் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளார்கள். அதனால், மருந்து இறக்குமதியில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை மதிக்கிறோம். ஆனால், சுகாதார துறையின் செயற்பாடுகளை பொறுத்தவரையில் அதனை எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்பதில் சிக்கல் நிலை இருக்கிறது.

ஒருசில நீதிமன்ற தீர்ப்புகளினால் சுகாதார அமைச்சின் செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதற்கு கவலையை வெளிப்படுத்துகிறோம்.

இரண்டாவதாக, நிதி தட்டுப்பாடும் இருக்கிறது. சுதந்திர கல்வி மற்றும் சுகாதார என்பவற்றுக்கான ஒதுக்கீடுகள் குறித்து முக்கிய கவனம் செலுத்தி வருகிறோம். ஒதுக்கீடுகள் தொடர்பில் முறையான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாவிட்டால் அது குறித்து இந்த சபைக்கு அறிவிப்போம்.

அமைச்சராக அவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடிவில்லை என்றால், தொடர்ந்து சுகாதார அமைச்சுப் பதவியை வகிப்பதில்லை என்று தீர்மானித்துள்ளேன். அதனை இந்த சமூகத்துக்கு இழைக்கும் பாரிய குற்றமாக கருதுகிறேன்.

எந்த காரணமாக இருந்தாலும், அந்த குறைபாடுகளின் பொறுப்புக் களை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறான நிலைமையே இன்று நிலவுகிறது. நிதி விடயங்கள் தொடர்பில் நிதி அமைச்சுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை, சிறுவர்களுக்கு மயக்க மருந்து பயன்படுத்தப்படுவதில்லை என்பதால் மயக்க மருந்துக்கு அப்பால் வேறு ஏதும் பிரச்சினைகள் இருக்கிறதா என்பதை தேடிப்பார்க்க வேண்டும் என்றார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.06.21
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5152
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 18,362,834.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 5 1 4 2 3 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3394
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,702,275.20
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 11 23 28 34

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1607
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,796,013.12
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 7 0 3 6 3 0

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1182
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 96,078,552.80
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 13 35 38 43

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 461
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,800,616.40
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 17 46 51 62
விசேட இலக்கினம் சிம்மம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1500
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 331,197,290.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து S
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 18 21 25 69

## தமிழனின் தாரகமந்திரம்...

புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை தோற்றுவிப்பதும் தமிழ்பேசும் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடியதும் மனக்குறைகளை இல்லாமல் செய்யக்கூடியதுமான இணக்கத்தீர்வொன்றை சகல சமூகங்களினதும் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் காணவேண்டிய காலத்தின் கட்டாயம் தொடர்பில் குறிப்பாக ஆட்சியாளர்களையும் பொதுவில் அரசியல் சமுதாயத்தையும் ஊக்கப்படுத்துவதும் தமிழனின் பிரதான குறிக்கோளாக இருக்கும் என்று நாம் அன்று பிரகடனம் செய்தோம்.

நாடும் மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதிலும் அவற்றுக்கான தீர்வுகளை காணவேண்டியது இன்றியமையாத கடப்பாடு குறித்து அரசாங்கங்களுக்கு அழுத்தியுரைப்பதிலும் நீண்ட காலமாக வெளிவந் துகொண்டிருக்கும் தேசிய பத்திரிகைகளுக்கு எந்த வகையிலும் குறைவில்லாத முறையில் தமிழன் செயற்பட்டு வருவதை மிகுந்த தன்னடக்கத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

இலங்கை வரலாறு முன்னென்றுமே கண்டிராத கடந்த வருடத்தைய பிரமாண்டமான மக்கள் கிளர்ச்சிக் காலப்பகுதியில் மக்களின் நியாயத்தின் பக்கம் நின்று, ஆட்சியதிகார வர்க்கத்திடமிருந்து வரக்கூடிய எந்த நெருக்குதலுக்கும் பணிந்துபோகாமல் தமிழன் செயற்பட்டதை எமது வாசகர்கள் அறிவார்கள். சமூகத்துக்கான எமது கடப்பாட்டு உணர்வின் பிரகாசமான வெளிப்பாடாக அமைந்த அந்த அணுகுமுறையை நாம் எந்த விதமான தளர்வுமின்றி தொடருவோம். தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை தமிழ்பேசும் சமூகங்களின் இருப்புக்கும் நியாயபூர்வமான அபிலாசைகளுக்கும் எதிராக இடையறாது செயற்பட்டு, மக்கள் மத்தியில் குரோதங்களை தூண்டிவிடும் நச்சுப்பிரசாரங்களை முன்னெடுக்கும் கடும்போக்கு பெரும்பான்மையின தேசியவாத சக்திகளுக்கு எதிராக உறுதியாக நாம் குரலெழுப்பி வந்திருக்கிறோம். அதேவேளை, உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான தற்போதைய காலகட்டத்தில் கடந்த கால அனுபவங்களில் இருந்து உகந்த படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டு, புதிய உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலைவரங்கள் தோற்றுவிக்கும் சவால்களை விவேகத்துடனும் நிதானத்துடனும் கையாளக்கூடிய விதத்தில் உரிமைப் போராட்டத்தை தொடருவதற்கு வழிகாட்டுவதில் தமிழ்பேசும் சமூகங்களின் அரசியல் தலைமைத்துவங்களின் போதாமைகள் அல்லது இயலாமைகள் குறித்த எமது ஆதங்கத்தை இன்றைய சந்தர்ப்பத்தில் பதிவுசெய்ய விரும்புகிறோம்.

இலங்கையின் இன்றைய சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நிலத்தோற்றத்தை நன்கு விளங்கிக்கொண்டவனாக தமிழன் எதிரே வரக்கூடிய சவால்களுக்கு முகங்கொடுத்து தனது பணியை தொடர்ந்து முன்னெடுக்க சமுதாயத்தின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டிநிற்கிறான். இதழியல் ஒழுக்கத்தைப் பொறுத்தவரை மக்கள் சமூகத்தின் பொது நலன்களை மனதிற்கொண்டு, நெறிமுறை பிறழாமல், நவீன தகவல் தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சியின் பயன்களை மக்கள் அனுபவிக்கக்கூடிய முறையில் உள்ளடக்கத்தில் தரத்தையும் புதுமையையும் பின்பற்றும்வரை முன்னேற்றத்தை நோக்கிய பயணத்துக்கு குறுக்கே எதுவும் நிற்கமுடியாது என்பதே எமது தாரக மந்திரமாகும்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 08ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** – பணம் ஏதோ வழியில் வந்து கொண்டிருக்கும். தெளிந்த மனதுடன் சேவையாற்றுவீர்கள்.

**ரிஷபம்** – பயணங்களால் மன மகிழ்ச்சி, உற்சாகம், தாய்வழி இலாபங்கள் உண்டு.

**மிதுனம்** – சமயோசித புத்தியால் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள். அவசிய செலவுகள் இருக்கும்.

**கடகம்** – திடீர் பண வரவுக்கான வாய்ப்புள்ளது. வார்த்தைகளால் விளையாடுவீர்கள்.

**சிம்மம்** – மனதை அலைய விடாதீர்கள். சிந்தனையில் மூழ்கியிருப்பீர்கள். அதனால் ஞாபக மறதி ஏற்படலாம்.

**கன்னி** – வீண் டென்ஷன் வேண்டாம். உங்கள் பணம், பொருட்களை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

**துலாம்** – தொட்டது துலங்கும் நாள். மன அமைதியுடன் அனைத்தையும் சாதிப்பீர்கள்.

**விருச்சிகம்** – பயணங்களால் சிரமங்களை அனுபவித்தாலும் பண வரவு உண்டு. ஏதோ ஒரு மகிழ்ச்சியால் திளைப்பீர்கள்.

**தனுசு** – எதிர்பாராத சுபச் செய்தியால் மகிழ்ச்சி. ஆலய தரிசனம் செய்து கொள்வீர்கள்.

**மகரம்** – மௌனம் காப்பதே சிறந்தது. யாருடனும் விதண்டா வாதம் செய்ய வேண்டாம்.

**கும்பம்** – காதல் பயணங்கள், சுற்றுலாக்கள் மூலம் மகிழ்ச்சி உண்டு. பெண்களால் இலாபம் உண்டு.

**மீனம்** – உடல் நிலையில் கொஞ்சம் கவனம் செலுத்துங்கள். அனைவரையும் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| **திதி** | : பஞ்சமி பி.ப. 7.54 வரை பின் ஷஷ்டி (வளர்) |
| **நட்சத்திரம்** | : மகம் முழுவதும் |
| **யோகம்** | : மரண யோகம் முழுவதும் |
| **வார சூலை** | : மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது |
| **நல்லநேரம்** | : மு.ப. 5.53– 6.53 மணி வரை |
| **ராகுகாலம்** | : 10.23– 11.53 மணி வரை |
| **எமகண்டம்** | : 2.53- 4.23 மணிவரை |
| **குளிகை** | : 7.23 – 8.53 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தனஅதிஷ்டம்** | : ஆயிலியம், கேட்டை, ரேவதி (பிறந்தவர்களுக்கு) |
| **விஷேட தினம்** | : ஸ்கந்த பஞ்சமி – மாணிவாசகர் குருபூசை |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739







# யாருக்கும் வேண்டாதவர்கள்!

உலகளாவிய ரீதியில் அகதிகள் பிரச்சினை மிகப்பெரிய அளவில் விஸ்வரூபம் எடுத்திருக்கிறது.

தேடி இடம்பெயர்பவர்களைப் போலவே வாழ்வாதாரம் சிதைந்து விரட்டியடிக்கப்பட்ட நிலையில், புலம்பெயரும் அகதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. அகதிகளின் ஊடுருவலால் தங்கள் நாட்டின் மக்கள்தொகை பகுப்பாய்வு மாறிவிடும் என்கிற அச்சத்தால் பல நாடுகள் செய்வதறியாமல் திணறுகின்றன.

போர் காரணமாக பொருளாதாரம் சிதைந்து வறுமையால் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் தேடும் அகதிகளின் எண்ணிக்கை ஏராளம். அப்படிப்பட்ட அகதிகளில் சிலரை சட்டவிரோதமாக கிழக்கு லிபியாவின் டோப்ரக் நகரிலிருந்து ஏற்றிக்கொண்டு சென்ற மீன்பிடிப் படகு கடந்த வியாழக்கிழமை கடலில் மூழ்கியது.

அந்தப் படகில் பெண்கள், குழந்தைகள் உட்பட 790 அகதிகள் பயணித்தனர். 78 சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டன. 144 பேரை உயிருடன் மீட்டனர். ஏனைய 568 பேரின் தலைவிதி என்னவாயிற்று என்று கடல் அன்னைக்குத்தான் தெரியும்.

இதேபோல இலங்கையிலிருந்து படகுகளில் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக கடத்திச் செல்வதும் நீண்ட காலமாகவே நடந்து வருகிறது. நடுக்கடலில் அவுஸ்திரேலிய கடற்படையினர் அந்தப் படகுகளைத் தடுத்து நிறுத்துவதும் திருப்பி அனுப்புவதும் கரைசேர முடியாமல் அகதிகளின் படகுகள் தடயமே இல்லாமல் கடலில் மூழ்குவதும் வழக்கமாகவே இருந்து வருகிறது.



1947 பிரிவினைக்குப் பிறகு இலட்சக்கணக்கான அகதிகள் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தனர். அதேபோல, பங்களாதேஷ் பிரிவினைப் போரைத் தொடர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்த இலட்சக்கணக்கான அகதிகளில் பலரை நிலைமை சீரானதும் அன்றைய இந்திரா காந்தி அரசு திருப்பி அனுப்பியது. இந்தியாவின் மக்கள்தொகை பகுப்பை, பங்களாதேஷ் இஸ்லாமிய அகதிகளின் வருகை மாற்றி அமைக்கும் என்றும், இந்தியாவின் நிதியாதாரத்தை அகதிகளுக்காக செலவிடும் நிலையில் தேசம் இல்லையென்றும் பிரதமர் இந்திரா காந்தி அப்போது தெரிவித்தார். ஆனாலும், பங்களாதேஷிலிருந்தும் இலங்கையிலிருந்தும் இந்தியாவில் தஞ்சமடைந்த அகதிகளை முடிந்தவரை இந்தியா பாதுகாக்கவே செய்திருக்கிறது.

அகதிகள் அடங்கிய படகுகள் விபத்தில் சிக்குவது ஒன்றும் புதிதல்ல. மூன்று மாதங்களுக்கு முன்பு இத்தாலியின் தெற்கு கடற்கரையோரமாக நிகழ்ந்த விபத்தில் 12 குழந்தைகள் உட்பட 60 பேர் உயிரிழந்தனர். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சோமாலியா நாடுகளைச் சேர்ந்த 150 அகதிகளுடன் கிழக்கு துருக்கியின் இஸ்மிர் நகரிலிருந்து புறப்பட்ட அந்த மீன்பிடிப் படகு அளவுக்கதிகமான நபர்களை ஏற்றிக்கொண்டு பயணித்ததால் ஏற்பட்ட விரிசலால் விபத்துக்குள்ளானது.

உள்நாட்டுப் போர், அரசியல் ரீதியிலான தாக்குதல்கள் போன்றவற்றால் தங்களது குடியுரிமையையும் உயிரையும் நாள்தோறும் அகதிகள் இழக்கிறார்கள். சர்வதேச புலம்பெயர்வோர் நிறுவனம் காணாமல்போகும் அகதிகள் குறித்து ஆய்வு நடத்தியது. 2020 நவம்பரில் தாக்கல் செய்யப்பட்ட அந்த ஆய்வின்படி உலகளாவிய நிலையில் 50,000க்கும் மேற்பட்ட அகதிகள் 2014 முதல் உயிரிழந்திருக்கிறார்கள். பெரும்பாலானோர் தங்களது நாடுகளிலிருந்து படகுகளில் தப்பித்து அபாயகரமான பயணத்தை மேற்கொண்டு புலம்பெயர முயன்றவர்கள்.

அகதிகளாகப் புலம்பெயர விழைந்தோரில் 60% அகதிகளின் தாய்நாடு குறித்த விவரம் தெரிவதில்லை. விவரம் கிடைத்தவர்களில் 9,000 பேர் ஆபிரிக்காவிலிருந்தும், 6,500 பேர் ஆசியாவிலிருந்தும், 3,000 பேர் தென்னமெரிக்க நாடுகளிலிருந்தும் புலம்பெயர முயன்றவர்கள்.

பெரும்பாலான அகதிகள், வன்முறையும் அடக்குமுறையும் உள்நாட்டுப்போரும் வறுமையும் நிறைந்த ஆப்கானிஸ்தான், சிரியா, மியான்மர் நாடுகளைச் சேர்ந்தவர்கள். புலம்பெயரும் வழியில் உயிரிழப்போரில் 11% பேர் குழந்தைகள் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். ரஷ்யாவின் உக்ரைன் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து 80 இலட்சம் பேர் அகதிகளாக வெளியேறியிருக்கிறார்கள். 60 இலட்சம் பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். உக்ரைன் அகதிகளைப் பொறுத்தவரை ஐரோப்பிய நாடுகள் அவர்களுக்கு அடைக்கலம் வழங்கி உதவுகின்றன.

உக்ரைன் அகதிகளுக்குக் காட்டப்படும் பாரபட்சம் வெளிப்படையாகவே தெரிகிறது. போலந்தில் உக்ரைனியர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால், ஆப்கானிஸ்தான், சிரியா, ஈராக் நாடுகளிலிருந்து நுழைய முற்படுவோர் முட்கம்பி வேலிகள் அமைத்து தடுக்கப்படுகின்றனர். பிரிட்டனில் உக்ரைன் அகதிகளுக்கு அடைக்கலம் வழங்கும் பிரிட்டிஷ் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்க அரசு திட்டமிடுகிறது. அதேநேரம், ஏனைய நாடுகளிலிருந்து பிரிட்டனில் நுழையும் சட்டவிரோத அகதிகளை ஒருவழி விமானப் பயணச்சீட்டுடன் ருவாண்டா நாட்டுக்கு அனுப்புகிறது. அதேபோல, ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இஸ்லாமிய நாடுகளிலிருந்து புலம்பெயரும் அகதிகளுக்கு அடைக்கலம் வழங்கி தங்களது மக்கள்தொகை பகுப்பில் மாற்றம் ஏற்படுவதை விரும்பவில்லை.

வேறுவழியில்லாமல் விரட்டியடிக்கப்படும் அல்லது வாழ்வாதாரம் தேடி வறுமையின் காரணமாக நாடுவிட்டு நாடு செல்லும் அகதிகள் பிரச்சினை அதிகரித்த வண்ணமே இருக்கிறது. பணக்கார நாடுகளை நோக்கிப் புலம்பெயர்தல் என்பது தவிர்க்க முடியாதது. சமச்சீரான வளர்ச்சி உலகில் ஏற்படாதவரை இதற்கு முடிவு கிடையாது.

அதேநேரத்தில் உள்நாட்டுப் போர், இன அழிப்பு, பயங்கரவாதம் ஆகியவற்றால் உருவாகும் அகதிகள் பிரச்சினையை இன்னும் எத்தனை நாட்கள்தான் உலகம் கண்களை மூடி கடந்து போகப் போகிறது?

நன்றி: தினமணி

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் திருகோணமலை வவுனியா மாவட்டங்களில் உதவித்திட்டங்கள்








சாவகச்சேரி நிருபர்

யாழ்ப்பாணம் - தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு 21/06 புதன்கிழமை உதவித்திட்டங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

அந்தவகையில் -செல்வநாயகபுரம் பிரதேச வைத்தியசாலையில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் வைத்தியசாலையின் கோரிக்கைக்கமைவாக 5,05,400 ரூபா பெறுமதியான மருந்து வகைகள் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் சத்தியசீலனிடம் கையளிக்கப்பட்டன.

அதேவேளை, வவுனியா, கல்லாறு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயத்திற்கு 4,40,520 ரூபா நிதிப்பங்களிப்பில் குழாய்க்கிணறு அமைத்து குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வுதவித் திட்டங்கள் வழங்கும் நிகழ்வுகளில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று உதவித்திட்டங்களை வழங்கி வைத்தார்.

மேலும் சிவில்சமூக செயற்பாட்டாளர் இ.தூபரன் மற்றும் ஆச்சிரம தொண்டர்களும் இதில் கலந்துகொண்டனர்.

# கடவுச்சீட்டு பெறும் செயன்முறை

## தென்மராட்சியில் ஆரம்பம்



சாவகச்சேரி நிருபர்

கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான கைவிரல் அடையாளத்தைப் பதிவுசெய்யும் நடைமுறை புதன்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த செயற்றிட்டத்தை தென்மராட்சிப் பிரதேச செயலர் ஆரம்பித்து வைத்திருந்தார்.

ஒன்லைன் முறையில் விண்ணப்பித்து கடவுச்சீட்டுப் பெறுவதற்கான கைவிரல் அடையாளத்தைப் பதிவுசெய்வதற்கு யாழ். மாவட்டத்தில் தென்மராட்சி மற்றும் பருத்தித்துறை ஆகிய இரண்டு பிரதேச செயலகங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய நாளில்...

- 1658 – இலங்கையில் போர்த்துக்கேயரின் கடைசிப்பிடியாக இருந்த யாழ்ப்பாணக் கோட்டையை டச்சுக்காரர் கைப்பற்றினர்.
- 1865 – இலங்கையில் இராணுவ செலவீனங்களை விசாரிக்கும் பொருட்டு அரச ஆணைக்குழு அமைக்கப்பட்டது.
- 1868 – தட்டச்சுக் கருவி கண்டுபிடிப்புக்கான காப்புரிமத்தை கிறிஸ்தோபர் சோலஸ் பெற்றார்.
- 1941 – லித்வேனிய செயற்பாட்டு முன்னணி சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலையை அறிவித்து, இடைக்கால அரசை அமைத்தது.
- 1960 – பத்திரிஸ் லுமும்பா கொங்கோ குடியரசின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதமர் ஆனார்.
- 1980 – இந்திய அரசியல்வாதி சஞ்சய் காந்தி விமான விபத்தில் உயிரிழந்தார்.
- 1985 – அயர்லாந்தில் அட்லாண்டிக் கடலின் மேல் 9500 மீட்டர் உயரத்தில் பறந்து கொண்டிருந்த இந்தியாவின் போயிங் விமானத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் அதில் பயணம் செய்த 329 பேரும் கொல்லப்பட்டனர்.
- 2010 – உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோயம்புத்தூரில் ஆரம்பமானது.




# நக்கல் நமசிவாயம்



# கைவிடப்பட்டிருக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் 23 திட்டங்கள்

## துறைசார் மேற்பார்வைக் குழுவில் அம்பலம்





அரசாங்கத்தின் பணத்தைச் செலவுசெய்து - வீண்விரயமாக்கி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்ட 23 திட்டங்களும் பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்டிருப்பதாகவும் அவற்றுள் 11 திட்டங்கள் நிறுவனங்களுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினைகளால் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் அம்பலமாகியுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்ட திட்டங்களைப் பரிசீலித்து அவற்றை மீளவும் ஆரம்பிப்பதற்கான உத்திகள் அல்லது பின்பற்றக் கூடிய நடைமுறைகளில் மாற்றம் செய்வது தொடர்பில் ஆராயும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தலைமையில் சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு கடந்த 20ஆம் திகதி கூடியிருந்தது.

அதன்போதே மேற்படி விடயம் தெரியவந்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை உள்ளடங்கலாக இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் உள்ளிட்டவை இக்குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தன.

இதன்போது நிறுவனங்களுக்கிடையிலான பிரச்சினைகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ள 11 திட்டங்களுக்காக 56,388 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2,531 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருப்பதாகவும் 1,423 மில்லியன் ரூபாவுக்கான கொடுப்பனவுகள் செலுத்தாமல் நிலுவையில் இருப்பதாகவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், திட்டங்களின் வேலைகளைப் பூர்த்தி செய்ய மேலும் 56,999 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் இங்கு புலப்பட்டது.

இத் திட்டங்களில் நிதிப் பற்றாக்குறை காரணமாக இடைநிறுத்தப்பட்ட திட்டங்கள் போல பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் தீர்க்கமுடியாத பிரச்சினைகளின் காரணத்தால் நிறுத்தப்பட்ட திட்டங்களும் அடங்கும். நிறுவனங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளால் பாதியில் நிறுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.

நிறுவனங்களுக்கிடையிலான பிரச்சினைகளால் தடைப்பட்ட 11 திட்டங்களில், கொட்டாவ முதல் மாஹேனவத்தை வரையிலான புதிய நுழைவு வீதி நிர்மாணம், அலவ்வ நகர அபிவிருத்தி (சாலைகளை விரிவுபடுத்துதல்), கம்பஹா நெடுஞ்சாலையில் இருந்து யக்கல வரையிலான நுழைவாயில் நிர்மாணம், இம்மதுவ நகர விரிவாக்கம், பேருவானாவத்தை, எஹெலியகொடவில் குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கான வீடுகளை அமைக்கும் திட்டம், ஹட்டன் புகையிரத அபிவிருத்தி மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலையை மறுசீரமைப்பது போன்ற திட்டங்கள் குறித்து குழு பரிசீலனை செய்தது.

கொட்டாவ முதல் மாஹேனவத்தை வரையிலான புதிய நுழைவு வீதியின் நிர்மாணப் பணிகள் சுமார் 98% நிறைவடைந்துள்ளதாகவும் காணிகளை இழக்கும் மக்களுக்காக வேறொரு இடம் முன்மொழியப்பட்டுள்ளதால் காணி சுவீகரிப்பு பிரச்சினை பெருமளவில் தீர்க்கப்பட்டுள்ளதென்றும் ஹோமாகம பிரதேச செயலாளரிடம் எஞ்சியுள்ள பிரச்சினைகளை தீர்த்து வைத்த பின்னர் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்க முடியுமென நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் குழு முன் தெரிவித்தனர்.

எஹலியகொட நகரத்தின் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நகரத்தின் ஊடாகச் செல்வதற்குப் பதிலாக உள்ளக வீதிகளை அமைப்பதால் காணிகளை இழக்கும் மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக திட்டமிடப்பட்ட பேருவானவத்தை, எஹலியகொட பகுதிகளில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு 34 வீடுகளை அமைக்கும் செயற்பாடுகள், அந்த வீடுகளுக்கான மின்சாரம், குடிநீர் விநியோகம் என்பவற்றைப் பெறுவதில் காணப்படும் பிரச்சினைகளால் இத்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகவும் காணியின் உரிமை தொடர்பில் புகையிரதத் திணைக்களத்துக்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குமிடையில் காணப்படும் பிரச்சினை, மின்சார சபை மற்றும் இரத்தினபுரி மாவட்ட சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் வசதிகளை வழங்குவதில் உள்ள பிரச்சினைகள், காணி உரிமை தொடர்பில் புகையிரதத் திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றுக்கிடையில் காணப்படும் பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தீர்க்கப்பட வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.

அத்துடன், உத்தேச கம்பஹா, மாக்கவிட, நெலும்வில ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட உடல் ஆரோக்கிய நடைபாதைத் திட்டத்தின் காணி சுவீகரிப்புப் பணிகள் நிறைவடைந்துள்ள போதிலும் அத்திட்டம் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளதாகவும் குழு முன்னிலையில் தெரியவந்தது. இதற்காக 13 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதால், இந்தக் காணிகளில் நகர்ப்புற காடு வளர்ப்பை மேற்கொண்டு, இலங்கையில் வனவளத்தை அதிகரிக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு குழு அறிவுறுத்தியது.வெலிக்கடை சிறைச்சாலையைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் தற்பொழுது வெலிக்கடையில் உள்ள காணியின் பெறுமதி அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் சரியான முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு இக்காணி குத்தகைக்கு அல்லது விலைமனுக்கோரலின் மூலம் இதனை விற்பனை செய்து கிடைக்கும் பணத்தில் ஹொரணையில் உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தில் சிறைச்சாலையை இடவசதியுடன் கூடியவாறு கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுமாறு சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குக் குழு அறிவுறுத்தல் வழங்கியது.

சம்பந்தப்பட்ட திட்டத்துக்கு அரசு பணத்தை செலவழிக்காமல் பெறப்படும் முதலீட்டின் மூலம் செலவை ஈடுகட்ட முடியும் என குழு வலியுறுத்தியது. மேலும், வெலிக்கடைச் சிறைச்சாலையை மாற்றியமைப்பதன் மூலம், அதிக பெறுமதிமிக்க வெலிக்கடைக் காணியை வேறு உற்பத்தி முதலீட்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தவும் இதன் மூலம் பெறும் தொகையில் அதிக வசதிகளுடன் சிறைச்சாலையை மீள அமைக்கவும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் குழு வலியுறுத்தியது.

நடத்தப்பட்ட கலந்துரையாடல்களுக்கமைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கிடையே நல்ல ஒத்துழைப்பு அல்லது உடன்பாடு இல்லாததே திட்டங்கள் நிறுத்தப்படுவதற்கு முக்கிய காரணம் என்று குழு சுட்டிக்காட்டியது.

மேலும், குறைந்த வளத்தில் திட்டங்களைத் தொடங்கும்போது, சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து முதற்கட்ட ஆய்வு செய்து, மிகவும் பயனுள்ள மற்றும் மிக முக்கியமான வழிமுறையைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. குழு வழங்கிய அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றவும் குழுவில் ஆராயப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் குறித்து மூன்று வாரங்களுக்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான துஷார இந்துனில் அமரசேன, அகில எல்லாவல, வருண லியனகே, திலக் ராஜபக்ஷ மற்றும் உபுல் மகேந்திர ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர்.







முன்னேற்றப் பாதையில் 3 ஆவது அகவை

சூடான செய்திகளுக்கு thamilan.lk உடன் இணைந்திருங்கள்

The Central Medical
No – 45, Central Road,Colombo-12
Tel: 0777642870

V. Jayakumar News paper Agnts and Transport
Kachriyady, Chunddukuly 076 8703940

Vino Book Center

Mahesh Travels
No – 08, Kattkuly Vavuniya
Tel: 074 2074201

News Papers Agent
Nawshad Trading Center and Lodging Center,
No – 68,Main Road, Akkaraipattu 01
Tel; 067 2277233, 071 4822752, Whatsapp – 077 2567660
Email Add – nawshadtradingakp@gmail.com

Poobalasingam Book Shop

Sumangali
Dealers in 22ct Gold Jewellers and Silver Jewellers,Beach Street (Sea Street), Colombo - 11, Tel: 011 2422808

Hameed Book shop
No – 477, Dockyard Road,Trincomalee
Tel: 0262222962/0775226216

K. Balarathnam
News Papers Agent No – 04, Flower Road, Colombo – 07 Tel: 0773450971

Ganam Printers
News paper Agnts and Kallaru – Colombo Bus Booking Kalmunai Road,Kallaru 077 64552067

School, Office stationery Items For sale at a low price

Anbarasan Book Shop

MADHYA ENTERPRISES
NO.682/1/A, Erawwala, Punnipitiya
Tel: 011-2089312 Mobile: 0779647813
info@madhya.lk www.madhya.lk

JOTHY BOOK CENTRE
out Suppling Items...
School Books
Office Stationary
Sports Items
cosmetics
Gift Items
Seasonal Items
Photo copying
News Agents
Get in Touch
0776946645
/0232222052
Grand Bazzar,Mannar

JAYAKODY AGENCIES(PVT) LIMITED
(Newspaper sales Advertising&Transport Agent)
E-Mail: jnkadkandy @gmail.com

'Dawasa' Book Center
No- 14,Railway Station Road,Gampola
Tel; 081 2352346

# மன்னாரில் சமுர்த்திப் பயனாளிகள் இரண்டாவது நாளாகவும் போராட்டம்

## வர்த்தகர்கள், வசதியுடையவர்கள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டு

மன்னார் நிருபர்

நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய சமுர்த்தி பயனாளிகளை அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் விடுபட்ட மற்றும் உள்வாங்கப்படாத பயனாளிகள் நேற்று வியாழக்கிழமை (22) காலை முதல் 2ஆவது நாளாகவும் மன்னார் பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.





நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் பட்டியலில் பணம் வசதியுடைய மற்றும் மாடி வீடுகளில் வசிப்பவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் விசேட தேவையுடைய மாற்றுத்திறனாளிகள், விதவைகள், சிறுநீரக நோயாளர்கள், சொந்த வீடு இல்லாதவர்கள் உள்வாங்கப்படவில்லை எனவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாட்டில் ஏற்கனவே பொருளாதார நெருக்கடி, விலைவாசி அதிகரிப்பினால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சஜித் பிரேமதாசவின் வீட்டுத் திட்டத்தினால் கடனாளிகளாக உள்ளதாகவும் இன்னும் பல பெண்கள் நுண்நிதி நிறுவனங்களில் கடன்பெற்று வாழும் இவ்வாறான நிலையில், சமுர்த்தி கொடுப்பனவுப் பட்டியலில் தங்கள் பெயர் நீக்கப்பட்டமை தங்களை ஏழ்மையில் தள்ள அரசாங்கம் மேற்கொள்ளும் சதி எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்களுடன் மன்னார் நகர் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் சந்தித்து புதிய நடைமுறை தொடர்பிலும் தெளிவுபடுத்தினார். எனினும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் பிரதான பாலத்தடி மற்றும் மன்னார் மாவட்டச் செயலகம் ஆகிய இடங்களுக்கு சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய சமுர்த்தி பயனாளிகள் அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் விடுபட்ட மற்றும் உள் வாங்கப்படாத பயனாளிகள் ஒன்றிணைந்து மாவட்ட ரீதியில் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# டெஸ்போட் கிரிமெட்டிய மக்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கவும்

## பிரதேச மக்கள் கோரிக்கை

டி சந்ரு

குடிநீர்ப் பிரச்சினைக்கு முகம்கொடுத்து வரும் டெஸ்போட் மற்றும் கிரிமெட்டிய தோட்ட மக்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்த்திட்டமானது குறித்த பகுதிகளுக்கு வழங்கப்படாது குடிநீர்ப் பற்றாக்குறை இல்லாத கொல்ஸி மற்றும் மஹாஎளிய தோட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட நானுஓயா டெஸ்போட் தோட்டம் மற்றும் கிரிமெட்டிய பகுதி தோட்டங்களில் வசிக்கும் குடும்பங்கள் மிக நீண்ட காலமாக சுத்தமான குடிநீர் கிடைக்காமல் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

மேற்குறித்த தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் சுத்தமான குடிநீரை பருகிவந்த நிலையில் கடந்த காலங்களில் இப்பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வீடமைப்புத் திட்டத்திலிருந்து வெளியாகும் கழிவு நீர் சுத்தமான குடிநீரில் கலந்துள்ளதால் அம்மக்கள் கழிவு நீரை பருக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தோட்ட நிர்வாகம் உள்ளிட்ட சுகாதார அதிகாரிகள் என சம்பந்தப்பட்ட பல தரப்புகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து குறித்த தோட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு இப்பகுதியில் குடிநீர் பிரச்சினைக்கு முகம்கொடுக்கும் ஏனைய தோட்டங்களும் இனங்காணப்பட்டு குடிநீர் வழங்க திட்டம் வகுக்கப்பட்டது. இதற்காக எட்டு மில்லியன் நிதியை உலக வங்கி ஒதுக்கியிருந்த நிலையில், நானுஓயா கொல்சி தோட்டத்தை மையமாக கொண்டு குடிநீர்த் திட்டத்துக்கான ஆரம்ப வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

பாரிய குடிநீர்ப் பிரச்சினைக்கு முகம்கொடுத்து வரும் டெஸ்போட் மற்றும் கிரிமெட்டிய தோட்ட மக்களின் வேண்டுகோளாக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில், தோட்ட மக்களுக்கு குடிநீர் வழங்காது குடிநீர்ப் பற்றாக்குறை இல்லாத கொல்ஸி மற்றும் மஹாஎளிய தோட்ட மக்களுக்கு ஆரம்பக்கட்ட குடிநீர் வழங்க நான்கு மில்லியன் ரூபா செலவு செய்யப்படுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே டெஸ்போட் மற்றும் கிரிமெட்டிய மக்களுக்கு நீர் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அரசின் சலுகைகளை மக்களுக்கு பெற்றுக்கொடுக்காத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ

உள்நாட்டில் விற்பனை செய்யப்படும் அனைத்து பொருட்களினது விலை காட்சிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யாத நிறுவனங்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அரசாங்கத்தின் சலுகைகளை பெற்றுக்கொண்ட பின்பும் அந்த சலுகைகளின் நலன்களை மக்களுக்கு பெற்றுக்கொடுக்காத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

'ஸ்திரமான நாட்டுக்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பு வியாழக்கிழமை(22) இடம்பெற்றது.

இதன்போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்றுக்கொண்டபோது நாடு பெரும் நெருக்கடிகள் பலவற்றுக்கு முகம் கொடுத்திருந்தது. அவ்வாறான சந்தர்ப்பத்திலேயே நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு அவசியமான அமைச்சு ஒன்றை எனக்கு வழங்கினார். நாட்டுக்குள் சில உணவுப் பொருட்கள் இரண்டு நாட்களுக்கு மட்டுமே மீதமிருந்தன. விவசாயத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வரலாற்றில் ஒருபோதும் இல்லாத அளவுக்கு அரிசி இறக்குமதி செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டது. கடந்த அரசாங்கத்தின் உரக்கொள்கை உணவுத் தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணமாக மாறியிருந்தது.

எவ்வாறாயினும் விவசாயிகளுக்கு அவசியமான உரத்தை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி உரிய வகையில் நடைமுறைப்படுத்தினார். அந்த வகையில் ஜனாதிபதியின் சரியான நடவடிக்கையின் காரணமாக எதிர்வரும் நாட்களில் அரிசி இறக்குமதிக்கான அவசியம் இல்லாமல் போகும். அதனால் அரிசி இறக்குமதிக்காக செலவிடப்பட்ட 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டுக்கு மீதமாகும். அவ்வாறு மீதமாகும் பணத்தைக் கொண்டு ஏனையப்



பொருட்களை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு கிட்டும்.

தற்போது பொருட்கள் இறக்குமதி செயற்பாடுகள் சிறந்த முறையில் இடம்பெறுகின்றன. நிறுவனங்களுக்கு அவசியமான கடன் பத்திரங்களை விநியோகிக்கும் செயற்பாடுகளும் வலுவாக முன்னெடுக்கப்படுகின்றன. வர்த்தகச் சந்தையில் நிலைமை சுமுகமாக மாறியிருந்தாலும் பொருட்களின் விலைகள் ஏன் குறையவில்லை என்பதே மக்களின் கேள்வியாக உள்ளது. ஒக்டோபர் மாதமளவில் பொருளாதார வளர்ச்சியை தனிப் பெறுமானத்துக்கு கொண்டு வருவதற்கான இயலுமை கிட்டும் என நம்பிக்கை உள்ளது.

அதேபோல் பொது மக்களை பாதுகாக்கும் நோக்கில் 20 வருடங்கள் பழமையான நுகர்வோர் சட்டமூலத்தில் மாற்றங்களை மேற்கொள்ளவிருப்பதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

# வாஹிர் நீர்மூழ்கியில் அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச யோகா தினம்





சர்வதேச யோகா தினத்தின் 09ஆவது பதிப்பை முன்னிட்டு இந்திய உயர்ஸ்தானிகராலயமும் உயர்ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையமும் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் புதன்கிழமை 21ஆம் திகதி காலை கொழும்பு துறைமுகத்தில் விசேட யோகா நிகழ்வொன்றினை ஒழுங்கமைத்திருந்தது.

யோகா தினத்தினை அனுஷ்டிப்பதற்காக 19 இந்திய கடற்படைக் கப்பல்கள் உலகளாவிய ரீதியில் பணிநிலைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், 2023 சர்வதேச யோகா தினத்தினைக் குறிக்கும் தனித்துவமிக்க முயற்சியான பூகோள சமுத்திர வளையத்துடன் கொழும்பையும் இணைக்கும் முகமாக இந்திய நீர்மூழ்கிக் கப்பலான வாஹிரிலும் அதற்கருகிலும் இந்நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன, இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, மேற்கு கடல் பிராந்திய தளபதி ரியர் அட்மிரல் பி.எஸ்.டி.சில்வா, இலங்கை கடற்படையினர் மற்றும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பணியாளர்கள், ஐ.என்.எஸ். வாஹிர் மாலுமிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது உரையாற்றிய உயர்ஸ்தானிகர், இந்தியா-இலங்கை இடையிலான பொதுவான பாரம்பரியமாகக் காணப்படும் யோகாவின் நிலைமாற்று சக்தி தொடர்பாக குறிப்பிட்டிருந்தார். இலங்கையில் உள்ள யோகா நிறுவனங்கள் மற்றும் யோகா ஆர்வலர்களின் வலுவான ஆதரவு மற்றும் உத்வேகத்துடன் கடந்த 50 நாட்களும் இந்திய உயர் ஸ்தானிகராலயமும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையமும் இணைந்து நாடளாவிய ரீதியில் 100க்கும் அதிகமான யோகா சார்ந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்திருந்தது.

மேலும், 2023 சர்வதேச யோகா தினத்தை அனுஷ்டிப்பதற்காக ஐ.என்.எஸ்.வாஹிர் இலங்கைக்கு மேற்கொண்டிருக்கும் விஜயம் மூலமாக நல்லெண்ணம், நட்புறவு மற்றும் தோழமையின் செய்தி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்திய கடற்படையின் கல்வாரி ரகத்தைச் சேர்ந்த இந்த நீர்மூழ்கிக் கப்பலான ஐ.என்.எஸ்.வாஹிர் அண்மையில் சேவையில் இணைக்கப்பட்டிருந்ததுடன் முதற்தடவையாக வெளிநாடொன்றின் துறைமுகத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

ஜூன் 19 முதல் 22 வரை இந்தக் கப்பல் கொழும்பில் தரித்து நின்ற காலப்பகுதியில் பாடசாலை மாணவர்கள், சாரணர்கள், தேசிய காலாட்படையினர், இலங்கை கடற்படையினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் உட்பட ஆயிரக்கணக்கானோர் இக்கப்பலுக்குள் விஜயம்செய்து பார்வையிட்டிருந்தனர். அதுமாத்திரமல்லாமல் வெளிக்கள நிகழ்வுகளாக கொழும்பைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களைச் சந்தித்திருந்த ஐ.என்.எஸ்.வாஹிர் நீர்மூழ்கியின் மாலுமிகள், சில பாடசாலைகளுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் அன்பளிப்பாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பும் வளர்ச்சியும் என்ற சாஹர் கோட்பாடு மற்றும் அயலுறவுக்கு முதலிடம் ஆகிய இந்திய கொள்கைகளின் அடிப்படையில் இரு அயல் நாடுகளினதும் கடற்படைகள் இடையிலான சகோதரத்துவம் மற்றும் ஒன்றிணைவினை இந்த விஜயம் மேலும் வலுவாக்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை – ஜப்பானுக்கிடையிலான நட்புறவை வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்

மாளிகைக்காடு செய்தியாளர்



இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து ஜப்பான் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ஷுன்சுகே டேக்கி, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு இடையில் விசேட கலந்துரையாடலொன்று வெளியுறவு அமைச்சில் வியாழக்கிழமை(22) இடம்பெற்றது.

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அந்நாட்டு வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ஷுன்சுகே டேக்கியை சந்தித்து கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இதன்போது, இலங்கை – ஜப்பான் இடையே நிலவும் நீண்டகால நட்புறவை இருவரும் நினைவூட்டியதுடன் எதிர்காலத்தில் நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. மாகாண ஆளுநர் என்ற வகையில் மாகாணத்தின் வளர்ச்சிக்காக நீங்கள் எடுக்கும் முயற்சிக்கு ஜப்பான் அரசு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் தங்களுடைய முயற்சியை பாராட்டுவதாகவும் ஷுன்சுகே டேக்கி ஆளுநரிடம் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்கள் சிறப்பாக உள்ளதாகவும் ஐ.எம்.எப். நிதி வசதியை பெற்றுக்கொள்வதற்கும் கடன் மறுசீரமைப்புத் திட்டங்களின்போது இலங்கை ஜனாதிபதியின் வழிகாட்டலின் பேரில் அர்ப்பணிப்புடன் அதிகாரிகள் பணியாற்றியதாகவும் ஷுன்சுகே டேக்கி தெரிவித்தார்.

அத்துடன், கடந்த பெப்ரவரி மாதம் சுதந்திர தின விழாவில் கலந்துகொள்ள இலங்கை வந்த வெளியுறவுத்துறைக்கான துணை அமைச்சர் ஷுன்சுகே டேக்கிக்கு சிறந்த வரவேற்பை இலங்கை அளித்திருந்தமைக்காக அவர் பாராட்டையும் நன்றியினையும் இதன்போது தெரிவித்திருந்தார்.

மேலும், இரு நாடும் இணைந்து மீன்பிடித்துறையுடன் தொடர்புடைய துறைசார் தொழிலை மேம்படுத்துவது குறித்தும் கனிம வளங்கள் குறித்தும் ஆராய்ந்து அதனை செயற்படுத்த ஜப்பான் அரசு பங்களிப்பு அளிக்க வேண்டும் என ஆளுநர் விடுத்த கோரிக்கைக்கு, சாதகமான பதிலளித்த ஷுன்சுகே டேக்கி ஜப்பான் தனது முழு ஆதரவையும் வழங்கும் எனவும் உறுதியளித்தார்.

# டயானா மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு



சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நீதிமன்றத்தை அவமதித்தது தொடர்பில் நடவடிக்கையெடுக்குமாறு, கொழும்பு நீதவான் பிரசன்ன அல்விஸ் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

கொழும்பு நீதவானின் உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்பே கசிந்ததாக உள்ளூர் தொலைக்காட்சி ஒன்றுக்கு கமகே கூறியது வேண்டுமென்றே நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்று நீதவான் பிறப்பித்த உத்தரவில் கூறினார்.

புலம்பெயர்ந்தோர் மற்றும் புலம்பெயர்ந்தோர் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கமகேவை கைது செய்வதற்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு போதிய ஆதாரங்கள் இருப்பதாக கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி நீதவான் உத்தரவிட்டார்.

ஜூன் 6ஆம் திகதி அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பான விவகாரத்தில் தீர்ப்பு வழங்கப்படவிருந்த நீதிமன்றத்தை பாதிக்கும் வகையில் கமகேவின் அறிக்கை வெளியிடப்பட்டதாக மனுதாரர் தரப்பு சட்டத்தரணி கூறினார்.

நீதவானின் உத்தரவு ஊடகங்களுக்கு கசியவில்லை என தனது விசாரணையில் தெரியவந்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.சேனாரத்ன நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சரின் கருத்தானது அப்பட்டமான அவமதிப்புச் செயல் எனவும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மாத்திரமே அவரது அறிக்கைக்கு உரிய தண்டனையை வழங்க முடியும் எனவும் நீதவான் பிரசன்ன அல்விஸ் தெரிவித்தார்.







அரசியல் சார்பின்றி தமிழ்ப்பேசும் மக்களின் நியாயமான விடயங்களை வெளிக்கொணர்ந்து இலங்கை வரலாற்றில் பாரிய திருப்புமுனையை ஏற்படுத்திய 'தமிழன்' பத்திரிகைக்கு வரலாறில் தடம்பதிக்க எனது வாழ்த்துகள்

முபாரக் அப்துல் மஜீத் – தலைவர் – ஐக்கிய காங்கிரஸ் கட்சி

# அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் 73ஆவது வருடாந்த மாநாடு

நியாஸ் இஸ்மாயில்

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் 73ஆவது வருடாந்த மாநாடு சனிக்கிழமை(24.06.2023) காலை 10.00 மணிக்கு பதுளை வங்கி வீதியிலுள்ள 'Crystal Auditorium' கெப்பிடல் சிட்டி ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஃசான் ஏ.ஹமீட் தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில், நாடு முழுவதும் 150க்கும் மேற்பட்ட அங்கத்துவக் கிளைகளின் உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

குறிப்பாக, கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையில் அங்கத்துவம் பெற்ற சுமார் 30க்கும் மேற்பட்ட கிளைகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கௌரவ அதிதியாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அகில இலங்கைவை.எம்.எம்.ஏ.பேரவையின் 72ஆவது வருடாந்த மாநாடு கொழும்பில் நடைபெற்றபோது தற்போதைய தலைவர் இஃசான் ஏ.ஹமீட் போட்டியின்றி தேசியத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் பதுளை வை.எம்.எம்.ஏ.தலைவராகவும் பேரவையில் பதுளை மாவட்டப் பணிப்பாளராகவும் பேரவையின் செயற்றிட்ட தவிசாளராகவும் பேரவையின் தேசிய பொருளாளராகவும் பின்னர் உபதலைவராகவும் செயற்பட்டவராவார். இவருடைய 2022/ 2023 காலப் பகுதியில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் ஊடாகவும் வை.எம்.எம்.ஏ. மூலமாகவும் மூவின மக்களுக்கும் நாடு முழுவதும்
















கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

பல்வேறுபட்ட சமூகப்பணிகள் இடம்பெற்றமை விசேடமாகக் கூறலாம்.

குறிப்பாக, வெளிநாட்டுத் துதுவர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் மூலமாகவும் பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் வளர்ச்சிக்கு முன்னாள் தேசியத் தலைவர்கள், BOT, EXCO, உபதலைவர்கள், செயற்றிட்டத் தவிசாளர்கள், மாவட்டப் பணிப்பாளர்கள் உள்ளிட்டவர்கள் பங்களிப்பு வழங்கி வருவதுடன் அக்கரைப்பற்றைச் சேர்ந்த முன்னாள் தேசியத் தலைவர் எம்.என்.எம்.நபீல், முன்னாள் தேசியத் தலைவர் சஹிட் எம்.றிஸ்மி (IPP) மற்றும் தற்போதைய தேசியத் தலைவர் இஃசான் ஏ.ஹமீட், பேரவையின் நிரந்தர அங்கத்துவ உறுப்பினர் எம்.ஐ.உதுமாலெப்பை, பேரவையின் உபதலைவர் எஸ்.தஸ்தகீர், பேரவையின் செயற்றிட்டத் தவிசாளர் கே.எல்.சுபையிர் ஆகியோர் கிழக்கு மாகாணத்தில் வை.எம்.எம்.ஏ புத்துயிர் பெறுவதற்கு பெரிதும் உதவி செய்தமையை விசேடமாகக் கூறலாம்.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் 2023 / 2024 காலப்பகுதிக்கு செயற்படுவதற்காக தேசியத் தலைவர், தேசிய பொருளாளர் ஆகியோரைத் தேர்தல் மூலம் தெரிவுசெய்ய அதிக வாய்ப்புகள் காணப்படுவதுடன் இதில் பேரவையின் தேசியத் தலைவராக மீண்டும் இஃசான் ஏ.ஹமீட் தெரிவுசெய்யப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுவதாகவும் அறியக் கிடைக்கின்றது. ஏலவே போட்டியின்றி பேரவையின் தேசிய பொதுச் செயலாளர் மற்றும் பேரவையின் ஐந்து உப தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் பேரவையின் உப தலைவர்களில் ஒருவராக அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்றைச் சேர்ந்த எம்.ஐ.உதுமாலெப்பை தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்நிறுவனம் 1950ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி மர்ஹும் டாக்டர் ஏ.எம்.ஏ.அஸீஸால் ஸ்தாபிக்கப்பட்டு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட இலாப நோக்கற்ற அரசியல் சார்பற்ற தொண்டு நிறுவனமாக 1968 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒருங்கிணைந்த அமைப்பாகும்.







மருதானை தொழில்நுட்பக் கல்லூரியின் 2023ஆம் ஆண்டுக்கான கல்லூரி அணித் தலைவர்களுக்கு உத்தியோகபூர்வ சின்னம் சூட்டும் நிகழ்வு கல்லூரியின் பணிப்பாளர் நெவில் எதிரிசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. தேசிய சேமிப்பு வங்கியின் அனுசரணையில் இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி வங்கியின் மாளிகாவத்தைக் கிளை முகாமையாளர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். இதன்போது NVQ 5/6 பிரிவு பொறுப்பதிகாரி மதாரா குணவர்தன மாணவரொருவருக்கு சின்னம் சூட்டினார்.

# ரணிலின் வருகையை எதிர்த்து லண்டனில் பாரிய ஆர்ப்பாட்டம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று அண்மையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை 'ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையாளி' என விமர்சித்து அவருக்கு எதிராக இரண்டு ஆர்ப்பாட்டங்கள் புலம்பெயர் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டன.

முதலாவது ஆர்ப்பாட்டம் லண்டன் பார்க் லேன் ஹோட்டல் முன்றிலிலும். மற்றைய ஆர்ப்பாட்டம் லண்டன் ஜோர்ஜ் ஸ்ட்ரீட்டில் நடைபெற்றது.

# தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் கிராம மக்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும்

## வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன்

விஜயரத்தினம் சரவணன்



முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் பகுதிகளில்மக்கள் மீள்குடியேற்றப்படவேண்டும் என வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலையில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், முல்லைத்தீவு பொலிஸாரோ, தொல்லியல் திணைக்களமோ அல்லது பௌத்த பிக்குகளோ நீதிமன்றத்தை மதிப்பதாகத் தெரியவில்லை. தமிழ் தரப்புகளான நாம்தான் நீதிமன்றத்தினதும் நீதிபதியினதும் கட்டளைகளை மதித்து நடக்கின்றோம்.

இந்நிலையில் கொழும்பிலே இருக்கவேண்டிய, கொழும்பைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இனவாதத்தைத் தூண்டும் விதமாக குருந்தூர் மலைக்கு வருகைதருவதும் பார்வையிடுவதுமாகச் செயற்படுகின்றார்கள்.

தெற்கிலே தமது வாக்கு வங்கியைப் பலப்படுத்துவதற்காகவே சில இனவாத அரசியல்வாதிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

குருந்தூர்மலையை அண்டிய பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்குரிய 306ஏக்கர் காணிகளை அபகரிக்கும் நோக்குடன் தொல்லியல் திணைக்களம் செயற்படுகின்றது.

இந்நிலையில், இந்த குருந்தூர்மலையை அண்டிய காணி விடயம் தொடர்பாக அண்மையில் எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியிருந்தனர். அப்போது ஜனாதிபதி இந்தக் காணிகளை விடுவிக்குமாறு உரியவர்களுடன் பேசியிருந்தபோதும் தொல்லியல் திணைக்களத்தினர் தொடர்ந்தும் அபகரிப்புச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தக் காணிகள் அனைத்தும் எமது தமிழ் மக்களுடைய வாழ்வாதார விவசாயக் காணிகளாகும்.

இவ்வாறான காணிகளை அபகரித்து இங்கு பௌத்த விகாரைகளை அமைத்து, சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகள் இங்கு முனைப்புப்பெற்று வருகின்றன.

இவ்வாறான சிங்களமயமாக்கல் செயற்பாடுகளுக்கெதிராகவும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்கெதிராகவும் நாம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்போது பௌத்த வழிபாடுகளுக்கு எம்மால் இடையூறு ஏற்படுத்தப்பட்டதாக பௌத்த பிக்குகளால் எம்மீது வழக்குத் தொடரப்படுகின்றது.

அத்தோடு தொல்லியல் திணைக்களத்தினர் தமது செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக எம்மீது வழக்குத் தொடர்கின்றனர்.

இந்நிலையில், தமது காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுவிடுமோ என எமது தமிழ் மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இனவாத அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது எமது நோக்கமல்ல. எமது தமிழ்மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

தமிழர்களின் பூர்வீக பகுதிகளான தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் ஆகிய கிராமங்களில் மக்கள் மீள்குடியேற்றப்படவேண்டும். எமது தமிழ் மக்களுடைய காணிகள் அபகரிக்கப்படாமல் எமது மக்களிடமே அவை கையளிக்கப்படவேண்டும் -என்றார்.

# சட்டத்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றார் வழக்கறிஞர் ஹுஸைன்



உடுநுவரையைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி எம். எஸ். எம். ஹுஸைன் சட்டத்துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இவருக்கான பட்டத்தை சப்ரகமுவ பல்கலைக்கழகம் வழங்கியது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வேந்தர் கபுருகமுவ வஜிர மாநாயக தேரரிடமிருந்து பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான உரிய கோட்பாடுகள் பற்றி ஆய்வு செய்து கீழ்நிலைக்குள்ளாகும் நபர்களின் சட்டபூர்வமான உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் சார்பில் மூன்றாம் தரப்பின் தலையீட்டினால் சகாயம் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பளிக்க உயர் நீதிமன்றத்துக்கு தத்துவம் இருக்கின்றது என்ற புதிய கருத்தொன்றை இவர் முன்வைத்தார். இதனை ஏற்றுக்கொண்டே இவருக்கு சப்ரகமுவ பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கியது.

1978இல் சட்டத்தரணியாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட இவர், 1997 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட முதுமாணிப்பட்டம் (LLM) பெற்றார். கொழும்பிலும் கண்டியிலும் உயர் நீதிமன்றத்தில் சிவில், குற்றவியல் வழக்குகளில் கடந்த 4 தசாப்தங்களுக்கு மேலாக ஆஜராகி வரும் இவர், பல்வேறு அரச நிறுவனங்களிலும் அரச தரப்புச் சட்டத்தரணியாகவும் செயற்பட்டுள்ளார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (22.06.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.9327 | 214.9804 |
| கனேடியன் டொலர் | 225.5659 | 240.3656 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40.9986 | 44.3494 |
| யூரோ | 327.0445 | 346.8606 |
| ஜப்பான் யென் | 2.1024 | 2.2268 |
| சிங்கப்பூர் டொலர் | 221.5976 | 235.5509 |
| ஸ்ரேலிங் பவுன் | 380.2528 | 402.5166 |
| சுவிஸ் பிராங் | 332.4977 | 354.6109 |
| ஐ.அ. டொலர் | 298.5485 | 314.9630 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 814.0937 |
| குவைட் | குவைட் தினார் | 999.3006 |
| ஓமான் | ஓமான் றியால் | 797.1874 |
| கட்டார் | கட்டார் றியால் | 84.2336 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 81.8087 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 83.5594 |

# அல்லைப்பிட்டியில் மீட்கப்பட்ட எலும்புக்கூட்டு எச்சங்கள் கொழும்புக்கு அனுப்பிவைப்பு

யாழ். நிருபர்



யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டிப் பகுதியில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூட்டு எச்சங்களை பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டி இரண்டாம் வட்டாரப் பகுதியில் வீடொன்றை அமைக்க கடந்த செவ்வாய்க்கிழமை அத்திவாரம் போடுவதற்கென நிலத்தை வெட்டும்போது மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் காணப்பட்டுள்ளன.

அது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அப்பகுதியில் இடம்பெற்ற வேலைகளை உடனடியாக நிறுத்தி அப்பகுதிக்குள் எவரும் செல்லாதவாறு தடையை ஏற்படுத்தினர்.

அது தொடர்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் அப்பகுதியில் தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க பொலிஸார் அனுமதி கோரியதையடுத்து நீதவான் கஜநிதிபாலன் சம்பவ இடத்திற்குச் சென்று மேலும் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க கட்டளை வழங்கியதுடன், அகழ்வுப் பணிகளையும் நேரில் கண்காணித்தார்.

அதன்போது, ஒரு மண்டையோடு , இரு எலும்புத் துண்டுகள், 27 பற்கள் என்பன மீட்கப்பட்டன. அதேவேளை, குறித்த பகுதியில் மேலும் எலும்புகள் மீட்கப்படாத நிலையில், நேற்று முன்தினம் அகழ்வுப் பணிகள் இடை நிறுத்தப்பட்டன.

மீட்கப்பட்ட எலும்புக்கூட்டு எச்சங்கள் பகுப்பாய்வுப் பரிசோதனைகளுக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மீட்கப்பட்ட எலும்புக்கூட்டு எச்சங்கள் சுமார் 20 வருடங்களுக்கு முந்தியவை எனத் தாம் சந்தேகிப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# நகை – பணம் திருடியமை தொடர்பில் 21 வயது இளைஞன் வவுனியாவில் கைது

வவுனியா நிருபர்

வவுனியா, சூசைப்பிள்ளையார்குளம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

வவுனியா, குருமன்காடு பகுதியிலுள்ள இரண்டு வீடுகளில் 4 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா மற்றும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடியமை, வைரவபுளியங்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடியமை, வவுனியா, மில் வீதியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் கோயில் உண்டியல் உடைத்து பணம் திருடியமை மற்றும் ஒலிபெருக்கி திருடப்பட்டமை தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த நகையை வீட்டில் வைத்துவிட்டு வவுனியா நகருக்கு வேலை நிமித்தமாக வீட்டார் சென்றுவிட்டு வீடு திரும்பியபோது, வீட்டின் பின்கதவு திறக்கப்பட்டிருந்ததுடன் வீட்டு அலுமாரிகளும் திறக்கப்பட்டிருந்தன.

வீட்டு அலுமாரிகளைப் பார்வையிட்டபோது அதிலிருந்த நகைகளைக் காணவில்லை. இதனையடுத்து வீட்டு உரிமையாளரால் வவுனியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மோப்பநாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயக்கொடியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி பி.கஜேந்திரன் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட் திசநாயக்கா (37348), பொலிஸ் கான்ஸ்டபிள் தயாளன் (91792) உள்ளடங்கிய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலினடிப்படையில் வவுனியா, சூசைப்பிள்ளையார்குளம் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞன் கைதுசெய்யப்பட்டதுடன், 10 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவுக்கு அடகு வைக்கப்பட்ட நிலையில் இருந்த நகை, ஆலய ஒலிபெருக்கியும் அவரிடமிருந்து மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தனர்.








கைத்தொழில் அமைச்சு

Sri Lanka Institute of Packaging

## Diploma Course in Packaging Technology - 2023

பொதியிடலுடன் தொடர்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் தங்களின் பணியாளர்களின் பொதியிடல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்பங்களை மேம்படுத்த முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், கைத்தொழில் அமைச்சு இலங்கை பொதியிடல் பயிற்சி நிலையத்துடன் இணைந்து பொதியிடல் **Diploma** பயிற்சிநெறி ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது. பொதியிடல் நிறுவனங்கள் கீழ்வரும் தகமைகளின் அடிப்படையில் தகுதியானவர்களின் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

**தகமை**

- க.பொ.த உயர்தரத்துடன் குறைந்தது 3 வருடங்கள் பொதியிடல் துறையில் அனுபவம் அல்லது.
- "The Certificate in Packaging Technology" கற்கைநெறி அல்லது
- குறைந்தது பொதியிடல் துறையில் 5 வருட அனுபவம் அல்லது அதுனுடன் தொடர்புடைய துறையில் 5 வருட அனுபவம்
- பொதியிடல் துறையில் இளங்கலைப் பட்டம் **(Digree)** அல்லது **Diploma** தகமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**மொழிமூலம் - ஆங்கிலம்**

Diploma **பாடநெறியில் உள்ளடக்கப்படுபவை**

- Unit 1 Packaging for Global Society and Markets
- Unit 2 Packaging Materials, Ancillary Materials, and Components
- Unit 3 Packaging Manufacturing and Application Processes
- Unit 4 Packaging Related Research and/or Development Project
- New Technologies and Future trends
- Managing adverse environmental and social impacts

இடம் கைத்தொழில் அமைச்சு, 73/1, காலி வீதி, கொழும்பு 3

**காலம்** :- 2023 **ஜூலை** 22 **முதல்** 24 சனிக்கிழமைகள் (3 முறை தொழிற்சாலை பயிற்சியுடன்)

**கட்டணம் :- தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியின் முழு கட்டணம்** ரூபா. 178,500 /=

கைத்தொழில் அமைச்சு சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளின் கட்டணத்தில் **50%** செலுத்தும் (கற்கைநெறியின் பொருட்கள் அடங்கலாக) தொழில் வழங்குனர் மிகுதி **50%** கட்டணத்தினை செலுத்த வேண்டும். (பயிற்நெறிக்கு உள்வாங்கப்படுபவர்களின் எண்ணிக்கை **30** ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.)

**விண்ணப்பதாரி** :-

கீழே தரப்பட்டுள்ள QR Code அல்லது கூகுள் Link இல் உள்ள விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து 2023 ஜூலை 04ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்பி வைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு** :-

Tel: 011-2422319 |Fax: 011-2432750 |Email:sector1mid@yahoo.com |Web: www.industry.gov.lk

செயலாளர்
கைத்தொழில் அமைச்சு
73/1, காலி வீதி, கொழும்பு 03.

விண்ணப்பப்படிவத்திற்கு QR மூலம் இணையத்திற்கு பிரவேசிக்கவும்.

Google Link: https://shorturl.at/ioyAI



வந்தாறுமூலை ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீமகா விஷ்ணு தேவஸ்தான வருடாந்த உற்சவ திருவிழா புதன்கிழமை (21) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா பூஜைகள் இடம்பெற்று எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 3ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். **படம்:** கனகராசா சரவணன்

# வைத்தியசாலை அவசர சிகிச்சை அறையின் கூரை உடைந்து சேதம்

## சிகிச்சை பெற்றவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்; கரடியனாற்றில் சம்பவம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு கரடியனாறு வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு அறையின் கூரை உடைந்து வீழ்ந்ததில் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சிகிச்சை பெற்றுவந்த 3 பேர் தெய்வாதீனமாக உயிர் தப்பிய சம்பவம் வியாழக்கிழமை(22) இடம்பெற்றது.

குறித்த வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சம்பவதினம் பகல் 12 மணிக்கு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது திடீரென அவசர சிகிச்சைப் பிரிவு அறையில் பொருத்தப்பட்டிருந்த அன்டசீற் உடைந்து வீழ்ந்து. எனினும் அங்கு சிசிக்சை பெற்று வந்த 03 பேரும் எவ்வித காயங்களும் இன்றி தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

இந்த கட்டடத்தில் கூரையின் மேல் இருந்து குரங்கு பாய்ந்ததில்தான் இவ்வாறு ஏற்பட்டதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது. எனவே புதிதாக கட்டிய வைத்தியசாலையின் கூரை குரங்கு பாய்ந்து உடைந்து விழும் அளவுக்கு தரமில்லாத வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. விபத்து மற்றும் நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் தான் மக்கள் தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வைத்தியசாலைக்குச் செல்வார்கள். இந்நிலையில், மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் உடைந்துவிழும் நிலையில் அன்டசீற் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எனவே, அதிகாரிகள் கட்டட நிர்மாணத்தின்போது பொறுப்புடன் செயற்படாததால் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதுடன் வைத்தியசாலை நிர்வாகத்தின் அசமந்தப்போக்கே காரணம் எனவும் சிகிச்சை பெறவந்தவர்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.



இதேவேளை, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனமெடுக்க வேண்டும் என்பதுடன் கிழக்கு மாகாண ஆளுநர் இதுபோல் தரமின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளை ஆராய்ந்து அவற்றை திருத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை விடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# போதைப்பொருள் தடுப்பு குறித்து மட்டக்களப்பில் கலந்துரையாடல்




கல்லடி செய்தியாளர், மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர் ப.தினேஷ் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை(21) இடம்பெற்றது.

மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டுதலின் கீழ் மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் மேற்பார்வையின் கீழ் மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

கிராம, பிரதேச மட்டங்களில் போதைப்பொருள் பாவனையையும் அதன்மூலம் ஏற்படும் பிரச்சினைகளையும் குறைப்பதற்காக, மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும்போது உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு தொடர்பாக கடமையாற்றும் உத்தியோகத்தர்களை வலுப்படுத்தும் முகமாக பயிற்சிப் பாசறைகளை தலைமைக் காரியாலயத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

# ஆரையம்பதி பிரதேச செயலகத்துக்கு முன் பதற்றம்



கல்லடி செய்தியாளர்

ஆரையம்பதி செல்வாநகர் கிழக்கு பிரிவில் முறைமையின் நலன்புரித் திட்டத்தின் கீழ் சமுர்த்திப் பயனாளிகள் 300பேரின் முத்திரைகள் நீக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து சமுர்த்திப் பயனாளிகள் ஆரையம்பதி பிரதேச செயலகத்துக்கு முன்பாக வியாழக்கிழமை(22) ஒன்றுகூடிய நிலையில் பதற்றநிலை ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு வருகைதந்த சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரால் பிரச்சினைகள் தொடர்பில் கேட்கப்பட்டு அவ்வாறு வெட்டப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கான விண்ணப்பப்படிவம் கொடுக்கப்பட்டு அருகில் உள்ள பிரதி நிலையத்துக்குச் சென்று விண்ணப்பப்படிவத்தை நிரப்பிக் கொண்டு கிராமசேவகரிடம் சென்று கையொப்பத்தை பெற்று மீண்டும் சமுர்த்தி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டனர். மேலும், உங்களது முத்திரை வெட்டப்பட்டுள்ளதா என அறிய விண்ணப்பப்படிவத்திலுள்ள கியூஆர் ஐ ஸ்கேன் செய்து அறிந்து கொள்ளுங்கள் என்றார்.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



தலைவர் பிரபாகரனின் மரபணு அறிக்கையை வெளியிட்டால் பாதுகாப்பு அச்சுறுத்தலாம் எண்டு பாதுகாப்பு அமைச்சு சொல்லியிருக்காங்க எலுவா? அடே பிரபாகரன் செத்துப்போயித்தாராம் எண்டு 14 வருஷம் கழித்துத்தான் அவங்கட ஆக்கள் இப்ப வெளிநாட்டில இருந்து ஊழை உடுறாங்க. நீங்க என்னன்டா 14 வருஷம் கழித்தும் பாதுகாப்பு அச்சுறுத்தல் என கத உடுறியள்.. உங்களுட்ட மரபணுவும் இல்ல மசிரும் இல்ல இதுதான் மெய்!



பிரசித்திபெற்ற கிட்டங்கி தாம்போதிக்கருகிலுள்ள நன்னீர் ஆற்றில் நீர் வாழைகள் பெருகுவதால் நன்னீர் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளது. ஆழ்கடல் கரைவலை மீன்களின் விலை அதிகரித்துள்ளநிலையில் மக்கள் நன்னீர் மீன்களை வாங்கி உணவுக்குப் பயன்படுத்தி வந்தனர். இந்நிலையில் நீர்வாழைகளை அகற்ற உரிய அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் என மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். **படம்:**நற்பிட்டிமுனை செய்தியாளர்




வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் நிதி உதவியில் ரிங்கோ எயிட் இனால் திருகோணமலை நகரில் உள்ள 05 பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டுவரும் இயற்கைவழி பாடசாலைத் தோட்டம் நிகழ்ச்சித் திட்டத்தின் அறுவடை நிகழ்வு புதன்கிழமை(21) தி உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் இடம்பெற்றது. இதன்போது பாடசாலைத் தோட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ரிங்கோ எயிட் நிறுவன அதிகாரி ராஜகோன் ஹரிகரன் ஆகியோரை காணலாம். **படம்:**கந்தளாய் செய்தியாளர்

# அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் 'சிப்தொர' புலமைப்பரிசில் வழங்கல்



திராய்க்கேணி செய்தியாளர்

சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் அஷ்-ஷெய்க் டி.எம்.எம்.அன்சார் தலைமையில் புதன்கிழமை(21) இடம்பெற்றது.

சமுர்த்திப் பிரிவின் தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஃமத்துல்லாவின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள 28 கிராம சேவகர் பிரிவில் சமுர்த்தி நலனுதவி பெறும் குடும்பங்களில் க.பொ.த.சா.தரத்தில் சித்தியடைந்து தற்போது 2022/2024ஆம் கல்வியாண்டில் உயர்தரத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் 102 மாணவர்களுக்கு மாதாந்தம் தலா 1500 ரூபா வீதம் ஒரு மாணவனுக்கு 24 மாதங்களுக்கு தலா 36ஆயிரம் வீதம் 102 மாணவர்களுக்கும் இரண்டு வருடங்களுக்குமாக ரூபா 3,672,000வழங்கப்படவுள்ளது.

இப்புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2023 பெப்ரவரி - மே மாதம் வரையான நான்கு மாதங்களுக்கான முதற்கட்டக் கொடுப்பனவு ரூபா 6ஆயிரம் வீதம் சகல மாணவர்களுக்கும் 6,12,000 ரூபா வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எகியா றாசித், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்சா, சமுர்த்தி திட்ட முகாமையாளர் என்.டி.மசூர், சமுர்த்தி வங்கி முகாமையாளர்களான யூ.கே.எம்.நளீம், கே.சத்தியபிரியன் ஆகியோருடன் பாடசாலை அதிபர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# பஸ்கள் குறைவால் ஆசிரியர்கள் அவதி

கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் பயணிக்கும் பஸ்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளமையால் இவ்வீதியூடாகப் பயணிக்கும் ஆசிரியர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக தாம் பாடசாலைக்கு 7.30 மணிக்குப் பின்னரே செல்ல முடிவதாகவும் கைவிரல் அடையாளத்தில் மூன்று தினங்கள் பிந்திச் சென்றால் அரைநாள் விடுமுறை கழிக்கப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் தற்போது கதிர்காம உற்சவ காலம் என்பதால் அதிகளவு பஸ்கள் கதிர்காமத்துக்குச் செல்வதாகவும் சில பஸ்கள் அங்கிருந்து நாள்தோறும் வருகை தருவதாகவும் பஸ்வீதி முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே தமது கஷ்டத்தினைப் போக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆசிரியர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கல்முனையை அழகுபடுத்துவது தொடர்பில் தனியார் துறையினருடன் கலந்துரையாடல்



சாய்ந்தமருது செய்தியாளர்

தனியார் துறையினரின் பங்களிப்புடன் கல்முனை மாநகரை அழகுபடுத்தும் வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் புதன்கிழமை (21) கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கி வருகின்ற வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது தொடக்கம் பெரிய நீலாவணை வரையிலான பிரதான வீதியை அழகுபடுத்தி, பசுமைமிக்க நகரங்களாக மாற்றியமைப்பதற்கான உத்தேச திட்டங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கல்முனை வாசல் உட்பட மாநகரில் உள்ள முக்கிய சந்திகளை அபிவிருத்தி செய்து, பேணிப் பாதுகாப்பது தொடர்பிலும் பிரதான வீதியில் இருந்து தொடங்கும் உள்ளூர் வீதிகளுக்கான பெயர்ப்பலகைகளை அமைப்பது, பூக்கண்டுகள் மற்றும் நிழல்தரும் மரங்களை நடுதல் உள்ளிட்ட செயற்றிட்டங்கள் குறித்து மாநகர ஆணையாளரால் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன்போது மாநகர சபையின் உத்தேச திட்டங்களுக்கு வரவேற்பு தெரிவித்த வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் மிக ஆர்வத்துடன் தமது யோசனைகளை முன்வைத்தனர். இவற்றுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் உறுதியளித்துள்ளனர். இக்கலந்துரையாடலில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சாய்ந்தமருது பிரதேச செயலகம் நடத்திய 'களிகம்பு பயிற்சிப் பட்டறை' கலாசார மத்திய நிலையத்தில் கலாசார உத்தியோகத்தர் எஸ்.சுரேஸ்குமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. முஹம்மதிய்யா கோலாட்ட குழுவின் ஸ்தாபகத் தலைவரும் சிரேஷ்ட அண்ணாவியாருமான எம்.ஐ.அலாவுதீன் உட்பட அதிதிகளுடன் கோலாட்டத்தில் பங்கேற்ற மாணவர்களான என்.நப்ரின், ஜே.எம்.சாபித், ஏ.ஏ.நதீஸ், ஏ.ஜி.எம்.ஆஸிப், எம்.எப்.எம்.றிஹ்பத், ஏ.எம். ஜப்பார், ஆர்.எம்.ஆஸாத், ஜே.எம்.றிப்காஸ், ஏ.எம்.ஹிஸாம், என்.எம். இஷாம், எஸ்.எம்.அஹ்ஸன், எஸ்.சாமில், ஆர்.எம்.சஹி உட்பட ஊடகவியலாளரும் கலைஞருமான எம்.எஸ்.எம்.ஸாகிர் மற்றும் பொல்லடிக் கலையைப் பயிலும் மாணவர்கள் ஆகியோரை படத்தில் காணலாம். **படம்:**வொலிவேரியன் செய்தியாளர்

# சேருவிலவில் இடம்பெற்ற மின்சார பாவனை குறித்த நடமாடும் சேவை



அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை மாவட்ட செயலகம், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் திருகோணமலை மின்சார சபை என்பன இணைந்து நடத்திய மின்சார பாவனை குறித்த நடமாடும் சேவை புதன்கிழமை(21) சேருவில பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

மின் கணக்கின் பெயர் மற்றும் முகவரியை மாற்றுதல், மின் கம்பங்கள் மற்றும் கேபிள் லைன்கள், மின்சார அனுமதி மற்றும் தொடர்புடைய இழப்பீடு, மரக்கிளைகளை வெட்டுதல், புதிய மின் இணைப்புகள், அமைப்பை மாற்றுதல், மின் கட்டணம் மற்றும் மின் தடை போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கான சிறந்ததொரு தீர்வாக இந்நடமாடும் சேவை இடம்பெற்றது.

## பேராதனை வைத்தியசாலையில் சிறுவன் உயிரிழப்பு!

# மயக்க மருந்தைக் காரணம் காட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

கண்டி நிருபர்

மயக்க மருந்தில் ஏற்பட்ட கோளாறின் காரணமாக பேராதனை வைத்தியசாலையில் சிறுவன் உயிரிழந்ததாகக் கூறப்படும் விடயம் முற்றிலும் தவறானது. ஏனெனில், சிறுவயதினருக்கு அவ்வாறான மயக்க மருந்து ஏற்றப்படுவதில்லை என சுகாதார அமைச்சர் கெஹேலியா றம்புக்வெல்ல தெரிவித்தார்.

கண்டிமாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வென்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,



சுகாதார சேவைக்கு உள்வாங்கப்பட்ட 253 புதிய சிற்றூழியர்களுக்கு நியமனக் கடிதங்கள் கையளிக்கப்படவுள்ளது. இவர்கள் மத்திய, சப்ரகமுவ, வடமேல் மாகாண வைத்திய சாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

மயக்க மருந்து தொடர்பான பிரச்சினை தவறான விடயமாகும். ஏனெனில், அம்மருந்து சற்று வலியை ஏற்படுத்தும் தன்மை கொண்டபடியால் அதனைச் சிறுவர் - சிறுமியர்களுக்கு ஏற்றுவதில்லை. எனவே, அந்த மருந்தினால்தான் சிறுவன் இறக்க நேரிட்டது என்பதை ஏற்க முடியாது.

ஊடகங்கள் சில சந்தர்ப்பங்களில் தவறான புரிதல்களை ஏற்படுத்துவதுண்டு. அதனை நம்பி மக்கள் தவறான பாதையில் சென்றுவிடக் கூடாது.

இவ்வைபவத்தில் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், பேராதனை, கண்டி மற்றும் பேராதனை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சிறுவர் வைத்தியசாலை முதலானவற்றின் பணிப்பாளர்கள் உட்பட பல உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## மலையக நட்சத்திரக் கலைப் பேரவையின் வெள்ளிவிழா ஞாயிற்றுகிழமை

கலஹா செய்தியாளர்

மலையக நட்சத்திரக் கலைப் பேரவையின் 25 ஆம் ஆண்டு வெள்ளிவிழா நிகழ்வுகள் நாளைமறுதினம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளன.

புஸல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரி (தேசியபாடசாலை) யில் பேரவையின் தலைவர் மலையக வாசுதேவன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன், இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அரச கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பதில் மேலதிக ஆணையாளர் சு. முரளிதரனும் சிறப்பு அழைப்பாளர்களாக பிரபல எழுத்தாளர் மு.சிவலிங்கம், கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் பெ.முத்துலிங்கம், கல்கி சேவாசங்கப் பணிப்பாளர் ஐ.வி.எஸ். விஜயன் உட்பட பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் இந் நிகழ்வில் கலை நிகழ்சிகளும் இடம்பெறவுள்ளன.

பாரம்பரிய கலை இலக்கியம் மற்றும் ஊடகக் கல்வி, சமூக சேவை, மருத்துவம் உட்பட பல துறைகளிலும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய ஐம்பதுக்கும் மேற்பட்டோர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக பேரவையின் செயலாளர் ஆறுமுகம் சந்திரமோகன் குறிப்பிட்டார்.

## டயலொக் வழங்கும் அனைத்து புதிய Power Planகளுக்கும் பல பிரத்தியேகமான அனுகூலங்கள்!




இலங்கையின் முதன்மை தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி தனது பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு சிறந்த மற்றும் அதிகபட்ச சேவையை வழங்குவதற்காக பல பிரத்தியேக அனுகூலங்களை வழங்கும் புதிய மேம்படுத்தப்பட்ட Power Plan பக்கேஜ்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதற்கமைய, அனைத்து புதிய Power Planகளுக்கும் நீங்கள் பயன்படுத்தாத டேட்டாவை அடுத்த மாதத்துக்கு இலவசமாக Roll-over செய்யலாம், உங்கள் அன்புக்குரியவர்களுடன் 50GB வரை டேட்டாவைப் பகிரலாம் (Data Share), மாதத்துக்கு ரூ.120க்கு Unlimited YouTube ஐ அனுபவிக்கலாம், டயலொக் வலையமைப்புக்குள் மாத்திரம் கிடைக்கின்ற தற்போதைய Unlimited Calls வசதியை ரூ. 100 இற்கு எந்தவொரு வலையமைப்புக்குமான Unlimited Calls ஆக upgrade செய்யவும் முடிவதுடன் Smart-phones மற்றும் சாதனங்களை வாங்கும்போது பிரத்தியேகமான தள்ளுபடிகள் உட்பட பல நன்மைகளுடன் இணையற்ற பிற்கொடுப்பனவு அனுபவத்தையும் இது வழங்குகிறது.

இவற்றுள் வெவ்வேறு Planகளை தெரிவுசெய்ய முடிவதுடன் நான்கு Planகளுக்கும் D2D Unlimited calls மற்றும் 1000 SMSகள் வழங்கப்படும். அத்துடன் தமது Data தேவைக்கேற்ப பொருத்தமான Dialog Power Plan ஐ தெரிவு செய்யும் வாய்ப்பும் வழங்கப்படுகிறது. ரூ.600 மற்றும் அதற்கு மேல் தெரிவு செய்யக்கூடியவாறு Power Planகள் உள்ளன. அதன்படி ரூ.600 Plan இல் 5GB Data, ரூ.800 Plan இல் 10GB Data, ரூ.1200 Planஇல் 20GB Data மற்றும் ரூ.2000 Plan இல் 50GB Data பெறலாம். வாடிக்கையாளர்கள் dialog.lk மூலம் புதிய இணைப்பைப் பெற முடியும் அல்லது MyDialog App மூலம் upgrade செய்ய முடியும்.

இதற்கு மேலதிகமாக, Power Plan அதன் சந்தாதாரர்களுக்கு சிறப்பு வாய்ந்த "7 Star" loyalty தர நன்மைகளுடன், Smartphones, புதிய டயலொக் இணைப்புகள் (Dialog Television மற்றும் Home Broadband) உட்பட Dongles/Wingles ஆகியவற்றுக்கு பிரத்தியேக விலைக்கழிவுகள் போன்ற நன்மைகளை வழங்குகிறது. இதற்கு மேலதிகமாக, Dialog விற்பனை பிரதிநிதிகளிடமிருந்து சந்தாதாரர்கள் பிரத்தியேக சலுகைகள் மற்றும் விலைக்கழிவுகளையும் பெறுவர்.

டயலொக் Power Plan பற்றிய மேலதிக விபரங்களுக்கு https://dlg.lk/3ld6x6mஐப் பார்வையிடவும்.

Dialog POWER PLAN

## ஹட்டன் பிரதேசத்தில் மீன் விற்பனை வீழ்ச்சி

ஹட்டன் பிரதேசத்தில் தற்போதுவரையில் மீன் விலை கடுமையாக அதிகரித்துள்ளதையடுத்து, இந்தப் பிரதேசத்தில் நுகர்வோர் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் அந்தப் பிரதேச நுகர்வோர், தற்போதுவரையில் மீன் விலை கடுமையாக அதிகரித்துள்ளதாகவும் இந்நிலைமையின் காரணமாக மீன் கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறினர்.

இதுதொடர்பில் தேடிப்பார்த்தபோது, இந்தப் பிரதேசத்தில் விற்பனையாகும் ஒரு கிலோ லின்னா 1,400 – 1,500 ரூபாவுக்கும் அலகொடுவா ஒரு கிலோ 1,200 – 1,300 ரூபாவுக்கும் ஹுருல்லோ ஒரு கிலோ 1,500 – 1,600 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறு மீன் வகைகள் 3,000 ரூபா மற்றும் 3,200 ரூபாவுக்கே விற்பனையாகின்றன.

இதுதொடர்பில் மீன் விற்பனையாளர்களிடம் வினவியபோது,

இதுவரையில் மீன்களுக்கான விலை கடுமையாக அதிகரித்துள்ளதால் சந்தைகளில் மீன் விலை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டனர். இவ்வாறு மீன் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையால் மீன் விற்பனை வீழ்ச்சியை சந்தித்துள்ளதாகவும், இந்நிலைமையின் காரணமாக தாம் பல்வேறு நெருக்கடியைச் சந்தித்து வருவதாகவும் வியாபாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பிடியாணை!

கண்டி நிருபர்



கண்டி மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (21) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கொன்றில் குற்றவாளியாகக் கருதப்படும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல நடிகரும் திரைப்பட இயக்குனருமான ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றத்துக்கு வருகை தராமையின் காரணமாக அவருக்கு கண்டி மேலதிக நீதவான் மொஹமட் ராபி பிடியாணை பிறப்பித்துள்ளார்.

குற்றவாளியாகக் கருதப்படும் ரஞ்சன் ராமநாயக்க சார்பில் நீதிமன்றத்தில் பிணையாளராக ஒருவர் ஆஜராகியிருந்ததுடன் அவருக்கு கடும் எச்சரிக்கை விடுத்து நீதவான் குற்றவாளியாகக் கருதப்படும் ரஞ்சன் ராமநாயக்கவை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு பொலிஸ் விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

கண்டி பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் ஆசிரியை ஒருவரிடம் 10 இலட்சம் ரூபா பணம் பெற்றுக்கொண்ட சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸ் விசேட குற்ற விசாரணைப் பிரிவினால் முன்வைக்கப்பட்டிருந்த வழக்கு தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராகாமையினாலேயே ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## நீர்வழங்கல்துறை விரைவில் டிஜிட்டல் மயமாக்கப்படும்

### அமைச்சர் ஜீவன் தலைமையில் விசேட கலந்துரையாடல்

பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச முதலீடுகள் மற்றும் நீர்வழங்கல் துறையை டிஜிட்டல் மயமாக்குதல் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில், இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவின் பங்கேற்புடன் நடைபெற்றது.



கொழும்பில் துரித கதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் போர்ட்சிட்டிக்கு நீர்வழங்கலின்போது முழுமையாக டிஜிட்டல் முறைமையை பயன்படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.






பைடன் – மோடி சந்திப்பில் ருசிகரம்:

# வெள்ளை மாளிகையில் சைவ விருந்து; ஜில் பைடனுக்கு 7.5 கெரட் வைரம் பரிசு



அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி ஜோ பைடனுக்கு தமிழ்நாட்டிலிருந்து கொண்டு செல்லப்பட்ட வெள்ளை எள்ளை வெள்ளிப் பெட்டியில் வைத்து பரிசளித்துள்ளார். வெள்ளை மாளிகையில் இரு தலைவர்களும் விரிவாக கலந்துரையாடினர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கின்னஸ் சாதனை யோகா நிகழ்ச்சியை முடித்துவிட்டு நியூயோர்க்கிலிருந்து வொஷிங்டன் டி.சி. சென்றுள்ளார்.

வெள்ளை மாளிகைக்கு சென்ற மோடியை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் அவரது மனைவி ஜில் பைடனும் வரவேற்றனர்.

இதன்போது பைடனுக்கு 'பத்து முதன்மை உபநிடதங்கள்' என்ற ஆங்கில புத்தகத்தையும் வெள்ளி விநாயகர் சிலை மற்றும் விளக்கையும் மோடி பரிசாக வழங்கினார்.

அதனுடன் பத்து சிறிய வெள்ளி பெட்டிகள் அடங்கிய சந்தன பெட்டியொன்றையும் பைடனுக்கு பரிசளித்தார். அதில் வெள்ளித்தேங்காய், ராஜஸ்தானில் தயாரிக்கப்பட்ட 24 கரட் தங்க நாணயம், 99.5 சதவீதம் தூய வெள்ளி நாணயம், தமிழ் நாட்டின் வெள்ளை எள், கர்நாடகாவின் சந்தனக் கட்டை, பஞ்சாப் நெய், ஜார்க்கண்டின் துஸ்ஸார் பட்டு, உத்தரகாண்டின் பாஸ்மதி அரிசி, மஹாராஷ்ட்ர வெல்லம், குஜராத் உப்பு ஆகியவை வைக்கப்பட்டிருந்தன. இரு நாடுகளின் உறவு தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பதற்காக இந்த பொருட்கள் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பைடனின் மனைவி ஜில் பைடனுக்கு இந்தியாவின் 75 ஆண்டுகால சுதந்திரத்தை குறிக்கும் வகையில், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் தயாரிக்கப்பட்ட 7.5 கெரட் வைரத்தையும் பரிசளித்துள்ளார்.

பதிலுக்கு, பிரதமர் மோடிக்கு 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்ட அரிய புத்தகம் ஒன்றின் கையெழுத்துப் பிரதியை ஜோ பைடன் தம்பதியினர் வழங்கினர். பழமையான அமெரிக்கக் கெமரா மற்றும் வனவிலங்கு புகைப்படக் காட்சிப் புத்தகத்தையும் பரிசளித்தனர்.

இதைத் தொடர்ந்து, வெள்ளை மாளிகையில் தாமரை மலர்களாலும் மயில் பீலிகளாலும் அலங்கரிக்கப்பட்ட அறையில் பிரதமர் மோடிக்கு இரவு சைவ விருந்து அளிக்கப்பட்டது. திணை உள்ளிட்ட சிறு தானியங்களால் ஆன உணவு வகைகளும் தர்பூசணி மற்றும் பச்சை காய்கறிகளுடனான செலட், வெண்ணெய் சோஸ், வெண்ணெய் பழம், பாஸ்த்தா, காளான் ஆகியவை விருந்தில் இடம்பெற்றிருந்தன.

இந்த சந்திப்பின்போது ஜோ பைடனுடன் பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக உரையாடியதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

# மாயமான டைட்டன் நீர்மூழ்கியில் தீர்ந்துபோகும் நிலையில் ஒட்சிசன்

## சப்தம் வந்த இடத்தில் கப்பல் இல்லை; ஐவரின் நிலை என்ன? தேடுதல் பணிகள் தீவிரம்



டைட்டானிக் கப்பலை பார்வையிட சுற்றுலாப் பயணிகள் சென்ற மாயமான நீர்மூழ்கியில் 95 மணி நேரத்துக்கு போதுமான ஒட்சிசன் இருக்கும் நிலையில், நீர்மூழ்கி மாயமாகி கிட்டத்தட்ட 80 மணி நேரங்கள் கடந்துள்ள நிலையில், நீர்மூழ்கிக்குள் இருக்கும் ஒட்சிசன் தீர்ந்துபோகும் அபாய கட்டத்தில் உள்ளமை அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, நீர்மூழ்கியை தேடும் பணியில் பெரும் பின்னடைவாக, சப்தம் வந்த இடத்தில் டைட்டன் நீர்மூழ்கி இல்லை என்றும் உண்மையிலேயே அந்த சப்தம் நீர்மூழ்கியிலிருந்து வந்ததாக இல்லாமல் இருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்படுகிறது.

புகழ்பெற்ற டைட்டானிக் கப்பல் மூழ்கியுள்ள இடத்தைப் பார்வையிடுவதற்காகச் சென்று ஆழ்கடலில் மாயமான டைட்டன் நீர்மூழ்கியில் ஒட்சிசன் அளவு வேகமாகக் குறைந்து வருவதால், அதிலுள்ள 05 பேரை உயிருடன் மீட்கும் முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

95 மணி நேரத்துக்கு போதுமான ஒட்சிசன் இருக்கும் நிலையில், நீர்மூழ்கி மாயமாகி கிட்டத்தட்ட 80 மணி நேரம் கடந்திருப்பதால், நீர்மூழ்கிக்குள் இருக்கும் ஒட்சிசன் தீர்ந்துபோகும் அபாயம் உள்ளது.

நீர்மூழ்கி மாயமான ஆழ்கடல் பகுதியிலிருந்து சப்தம் எழுந்தது கண்டறியப்பட்டதையடுத்து, அது நீர்மூழ்கிக்குள் இருப்பவர்கள் எழுப்பிய ஓசையாக இருக்கலாம் என்று கருதப்பட்டதால் அவர்கள் உயிருடன் மீட்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை எழுந்தது.

அதையடுத்து தேடுதல் பணிகளின் கவனம் அந்த சப்தம் எழுந்த பகுதியை நோக்கி அதிகரிக்கப்பட்டது. எனினும், அந்த சப்தம் டைட்டன் நீர்மூழ்கியிலிருந்து வந்ததாக உறுதியாகக் கூற முடியாது என்று தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க கடலோர காவல் படைப்பிரிவு தளபதி ஜோன் மாகர் தெரிவித்தார்.

மேலும், மிகவும் ஆழமான கடலுக்குள் மாயமாகியுள்ள டைட்டன் நீர்மூழ்கியைத் தேடுவது, தொடர்ந்து சிக்கலான மற்றும் மிகக் கடுமையான பணியாக உள்ளது. எனினும், ஆழ்கடலில் நிபுணத்துவம் பெற்ற பிற அமைப்புகளின் ஆலோசனைகளுடன் கடலுக்குள் மூழ்கியவர்களை மீட்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# மொராக்கோ கடற்பகுதியில் படகு மூழ்கி அகதிகள் 36பேர் பலி; 06 சடலங்கள் மீட்பு



மொராக்கோ கடற்பதியில் படகு மூழ்கியதில் புலம் பெயர்ந்த அகதிகள் 60 பேர் கடலில் மூழ்கினர். இதில் 36 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. 06 உடல்கள் மீட்கப்பட்ட நிலையில் காணாமல்போன 30 பேரை ஸ்பெயின் கடல் மீட்புக்குழுவினர் தேடி வருகின்றனர்.

ஸ்பெயின் எல்லைக்குட்பட்ட கடற்பகுதியில் அந்தப் படகில் இருந்தவர்கள் 12 மணி நேரமாக உதவி கேட்டு தத்தளித்துக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

படகு இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க விமான மொன்று உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், படகு மூழ்கும் அறிகுறி ஏதும் இல்லை என்று அந்த விமானம் திரும்பி வந்துவிட்டது.

இந்நிலையில் குறித்த படகு ஆபிரிக்க கடற்கரையிலிருந்து சுமார் 70 கிலோமீற்றர் (44 மைல்) தொலைவிலும், கேனரி தீவுகளுக்கு தெற்கே 160 கிலோமீற்றர் தொலைவிலும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த சம்பவத்தில் கடலில் மூழ்கி 36பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

உலக செய்திகள்

## செய்தித்துளிகள்

**★ 3 டிக்ரி குளிரில் ஆடையின்றி நீச்சல்**

அவுஸ்திரேலியாவின் டெர்வெண்ட் ஆற்றில் உறையும் தண்ணீரில் இரண்டாயிரம் பேர் ஆடைகளின்றி நீச்சலடித்தனர்.



ஜூன் 22ஆம் திகதி, ஆண்டிலேயே குறைந்த பகல் பொழுதை கொண்ட நாள் என்பதால் அதனை கொண்டாடும் விதமாக, கடந்த பத்தாண்டுகளாக இந்த விநோத நீச்சல் நடத்தப்பட்டு வருகிறது.

அதிகாலை வேளையில், 03 டிக்ரி கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் ஆண்களும் பெண்களும் உற்சாகமாக ஆற்று நீரில் நீச்சலடித்தனர்.

**★ வெள்ளத்தில் மூழ்கிய அசாம்**

அசாம் மாநிலத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக அங்குள்ள 108 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சுமார் 45 ஆயிரம் மக்கள் வீடுகளை இழந்துள்ளதாகவும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை, தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள் துறை உள்ளிட்டவை மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

**★ மியன்மாரில் நிலநடுக்கம்**

மியன்மாரில் அடுத்தடுத்து மூன்று முறை நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் அச்சமடைந்தனர்.

மியன்மாரின் யாங்கூன் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 4.4 ரிச்டர் அளவில் இரண்டு நிலநடுக்கங்களும் நேற்று அதிகாலை 4.7 ரிச்டர் அளவிலும் நிலடுக்கம் பதிவாகியுள்ளது.

நில நடுக்கத்தால் மக்கள் இரவு முழுவதும் உறக்கமின்றி விழித்தபடி இருந்தனர். ஏராளமானோர் அச்சத்தால் வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

# களத்தில் மோதிக்கொண்ட இந்திய – பாக். வீரர்கள்

## மைதானத்திலிருந்து வெளியேற்றப்பட்ட இந்திய பயிற்சியாளர்



இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தெற்காசிய உதைபந்து போட்டியின் போது வீரர்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்ட நிலையில், இந்திய பயிற்சியாளர் வெளியேற்றப்பட்டார்.

ஒரு கட்டத்தில் இந்திய வீரர் ப்ரீதம் கோட்டலுக்கு நடுவர் ஃபவுல் கொடுத்து, பாகிஸ்தான் வீரர் அப்துல்லா இக்பாலை த்ரோ செய்ய அழைத்ததால், இந்திய பயிற்சியாளர் இகோர் ஸ்டிமாக் அவரை தடுத்தார். இதன் காரணமாக பாக் வீரர் மற்றும் பயிற்சியாளர் ஷாஜாத் அன்வர் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, நடுவர் இந்திய பயிற்சியாளர் இகோர் ஸ்டிமாக்கை உடனடியாக வெளியேற்றினார்.

எனினும், பாகிஸ்தான் பயிற்சியாளர் ஷாஜாத் அன்வருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. ஆனால் அவருக்கு எச்சரிக்கை (மஞ்சள் அட்டை) மட்டுமே வழங்கப்பட்டது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிகாண் தொடர்:

# இன்று ஓமானை எதிர்கொள்ளும் இலங்கை



இந்தியாவில் ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான இரு அணிகளை தெரிவுசெய்யும் தகுதிகான் தொடரில் தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணி இன்று தங்களது இரண்டாவது ஆட்டத்தில் ஓமான் அணியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி பகல் 12.30 மணிக்கு புலவாயோ நகரில் ஆரம்பமாகிறது.

ஜூன் 18 முதல் ஜூலை 9ஆம் திகதி வரை நடைபெறும் தகுதிச்சுற்றில் மொத்தமாக 10 அணிகள் போட்டியிடுகின்றன. இதில் குழு ஏ, பி என இரு பிரிவுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தை பெறும் இரு அணிகள் இந்தியாவில் ஒக்டோபர் 05ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதிவரை நடைபெறவுள்ள உலகக்கிண்ணத்துக்கு தகுதிபெறும்.

அந்த அடிப்படையில் குழு பி யில் இடம்பெற்றுள்ள இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் கடந்த திங்கட்கிழமை ஐக்கிய அரபு இராச்சிய அணியை 175 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலகுவாக வீழ்த்தியது. இன்று இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அணி ஓமான் அணியை எதிர்கொள்கிறது. முன்னதாக ஓமான் அணி விளையாடிய இரு ஆட்டங்களில் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அங்குரார்ப்பண ஒலிம்பிக் ஈஸ்போட்ஸ் போட்டி: இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரயன்



மோட்டார் விளையாட்டுக் கழகம் மற்றும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரயன் பெரேரா, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெறவுள்ள அங்குரார்ப்பண ஒலிம்பிக் ஈஸ்போட்ஸ் தொடரின் இறுதிப் போட்டியில் பங்குபற்ற தகுதி பெற்றுள்ளார்.

மோட்டார் போட்டிகள் பிரிவில் ஈஸ்போட்ஸ் வாரத்தில் போட்டியிடவுள்ள முதலாவது இலங்கையராக இவர் காணப்படுகின்றார். பிரயன் 2007ஆம் ஆண்டு முதல் போட்டியில் கலந்துகொண்டு வருகிறார். கார்ட்டிங் போட்டியில் ஆரம்பித்த இவர் Formula EFI இல் சம்பியன் ஆன பின்னர் Formula McLarens 1300 LGB போட்டியில் கலந்துகொண்டார். Formula Junior Championship போட்டியில் வெற்றிபெற்றதுடன், இந்தியாவில் நடைபெற்ற Formula BMW போட்டியில் நான்காவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். முன்னணி மோட்டார் விளையாட்டில் வெற்றிபெற்ற ஒரேயொரு இலங்கையர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

ஒலிம்பிக்ஸ் ஈஸ்போட்ஸ் தொடர் 2023 – உலகளாவிய ரீதியிலான மெய்நிகர் மற்றும் உருவகப்படுத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியாகும் என்பதுடன், முதலாவது ஒலிம்பிக்ஸ் ஈஸ்போட்ஸ் வாரம் ஜூன் 22 முதல் 25ஆம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது.

# தோப்பூர் கிண்ணம் கடினபந்து கிரிக்கெட் போட்டித் தொடர் ஆரம்பம்





தோப்பூப் கிண்ணத்தின் ஆரம்ப நிகழ்வில் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி ஹில்மி முகைதீன் முதன்மை அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

மூதூர் நிருபர்

23 கடினபந்து அணிகள் பங்கு கொள்ளும் தோப்பூர் கிண்ணம் கடினபந்து கிரிக்கெட் போட்டித் தொடரின் ஆரம்ப நிகழ்வு தோப்பூர் அல்-ஹம்றா மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (20) மாலை கோலாகலமாக நடைபெற்றது.

தோப்பூர் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் 6ஆவது தோப்பூர் கிண்ணம் இதுவாகும். இப் போட்டித் தொடரின் ஆரம்ப நிகழ்வில் 23 கடினபந்து அணிகளும் தங்களது புதிய மேலங்கிகளை அணிந்து மோட்டார் சைக்கிள்களில் பேரணியாக வந்தனர். அத்தோடு தோப்பூர் கிண்ணத்தின் அறிமுகமும் அணிகளின் அறிமுக நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# இங்கிலாந்து, ஆஸி. அணிகளுக்கு அபராதம்

ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் அவுஸ்திரேலிய மற்றும் இங்கிலாந்து ஆகிய இரு அணிகளும் மந்த கதியில் ஓவர்களை வீசியதற்காக ஐ.சி.சி. யினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து – அவுஸ்திரேலிய டெஸ்ட் போட்டியின் மத்தியஸ்தராக இருந்த என்டி பைக்ரோப்ட் அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய இரண்டு அணிகளும் வழங்கப்பட்ட நேரத்துக்குள் 02 ஓவர்கள் குறைவாக வீசியிருந்தன என குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருந்ததோடு, இந்த குற்றச்சாட்டை இரு அணிகளது தலைவர்களும் எந்தவித மறுப்புகளும் இன்றி ஒப்புக் கொண்டிருந்தனர். இந்த குற்றச்சாட்டினை ஒப்புக்கொண்டதற்கு அமைய, இரு அணிகளது வீரர்களுக்கும் அவர்களது போட்டிக் கட்டணத்தில் 40 சத வீதம் அபராதமாக விதிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் ஆஷஸ் தொடர் புதிய பருவத்துக்கான ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரிலும் அடங்குவதன் காரணமாக இரு அணிகளுக்கும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பிற்காக வழங்கப்படும் புள்ளிகளிலும் இரண்டு புள்ளிகள் குறைக்கப்பட்டுள்ளன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7